# உடுத்துறைச்சபையின்
# விசித்திரசரிதம்

JAFFNA COLLEGE LIBRARY
OCT 1? 19??

“பாழானநிலத்திலும் ஊளையிடுதலுள்ள
வெறுமையான அவாந்தரவெளியிலும்……
கண்டுபிடித்தார், …… நடத்தினார், ……
உணர்த்தினார், …… தமது கண்மணியைப்
போலக் காத்தருளினார்.” (உபா. 32: 10)

-66 021
உடு

1941

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

266.021
UDU

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Q4
JAFFNA COLLEGE
1872
LIBRARY
ARCHIVES
RARE BOOKS SECTION
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரிசைவெண்பா

சித்திரந் கெஞ்சடியோன் சென்னியிறைஞ் சக்கரங்கள்
வந்திக்க எஞ்ஞான்றும் வாழ்த்துகவாய்—புந்திக்குள்
வீற்றிருக்கும் யோக விரைமலர்ப்பூஞ் சேவடிக்கே
ஆற்றுகமெய் அன்பின் பணி.

## கலித்துறை

"கன்னி பாலனாய்க் காசினி தனிலவ தரித்து
மன்னு சிவகோ டிகளெலாம் வால்கதி மருவத்
தன்னு யிர்ப்பரித் தியாகமும் சிலுவையிற் தந்த
என்னு பாசனா மூர்த்தியை அஞ்சலித் திடுவாம்"

H. A. K.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIBRARY,
OCT 12 1943
VADDUKODDAI, CEYLON.

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது ஆலயம்
(33-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுத்துறைச்சபையின்
# விசித்திரசரிதம்

JAFFNA COLLEGE LIBRARY,
OCT 12 1943
VADDUKODDAI, CEYLON.

உடுத்துறை,

1941-ம் ஆ. தை மீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி,
இலங்காபிமானி அச்சியந்திரசாலை

8831
R. 21880.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிறுசபையைக் கருவாக்கி உருவாக்கி
எதிர்ப்பட்ட எல்லாச் சோதனைகளிலும் தம் வல்ல
கரத்தாற் தாங்கி வழிநடாத்திவந்தவரும், வருபவரும்,
தேவாதிதேவனும், கர்த்தாதிகர்த்தனும்,
இராசாதிராசனுமான எம்பெருமான்
இயேசுசுவாமியின் திருவடிகளில்
இப்புத்தகத்தைப் பாத
காணிக்கையாகப்
படைக்கின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்முகம்

இன்றைக்கு நம் உடுத்துறைத்திருச்சபை தொண்ணூறு வயது நிரம்பியதேனும் வயோதிபமடைந்து மூத்துத்தளர்ந்ததல்ல: அது ஆச்சரியமான சம்பவங்களையுடையது. இன்னும் இளமையோடிருந்து வளர்ந்துவருகின்றது. இத்தொண்ணூறு வருட சரிதையையும் பலர்வாய்க்கேட்டறிந்தும், வாசித்தும், கண்டும் இச்சிறுநூலாக தெய்வகிருபையின் பெலத்தால் வெளியிட்டேன். எனினும், இச்சரிதை கருவாகி உருவாகி நூலாகி வெளிவரற்குக் காரணமாயினோர் பலர். கனம் D. P. மூத்ததம்பி உபதேசியாரவர்கள் அநேக சம்பவக்குறிப்புகளைத் தந்துதவினார்கள். சங்கைதங்கிய கனம் J. A. R. நவரத்தினம் பாதிரியாரவர்கள் பலபடங்கள் சேகரித்துத்தந்தும், பலதிருத்தங்கள்புரிந்தும், ஓர்முன்னுரை அளித்தும் தமதியல்பான அன்பால் ஊக்கியும் உதவினார்கள். இரத்தினபுரியில் (Head Clerk) தலைமைலேககராகக் கடமைபுரியும் கனம் M. முத்தையா அவர்களும் கேகாலையில் அரசினர் வைத்தியராகக் கடமைபுரியும் கனம் A. N. மூத்ததம்பியவர்களும் இந்நூல் அச்சிடற்கென பெருந்தொகைப்பணம் சேகரித்துத்தந்தார்கள். மீதிப்பணத்தை நமதுசபைஉதவிற்று. அழகாக அச்சிட்டுத்தந்தார்கள் சாவைநகர் இலங்காமோனி அழுத்தகத்தார். இவர்கட்கெல்லாம் அடியேனும் இதனைப்படித்துப் பயனுறுவோரும் கிறிஸ்துவுக்குள் நன்றிபாராட்டக் கடமைப்பட்டோம்.

இதனுள் ஆங்காங்கு பல பெருந்தகையாளரை முகமனுக்காகவுமன்று, மிகைப்படுத்தியுமன்று, வேறெக்காரணத்தினாலுமன்று பரிசுத்த தேவனின் திருநாமம் மகிமைப்படற்காக மாத்திரமே உள்ள உள்ளவாறே புகழ்ந்துரைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கின்றேன். எல்லா மகிமையும் கனமும் புகழ்ச்சியும் துதியும் மனுஷனுக்கல்ல தேவாதிதேவனுக்கே உரியன.

எந்த நற்காரியத்துக்கும் தகுதியற்ற அடியேன் இதனை எழுதநேர்ந்தமை எனக்குமே பெருவியப்பைத் தருகின்றது. என்னுடைய குறைவுகளையும், தகுதியின்மைகளையும் நானே நன்றாக அறிந்திருக்கின்றேன். என்றாலும், இச்சரிதம் யாராலாவது எப்போதாவது எப்படியாவது எழுதப்படவேண்டியதுதானே? ஆகையால் அடியேன் எழுத முன்வந்தேன். கல்லுகளிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளையுண்டுபண்ண வல்லவரும் ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் தோற்றுவிப்பவரும் ஆகிய அவரே எத்தன்மைக்கும் எல்லா வல்லமைக்கும் ஊற்றானவர். அப்பரம்பொருட்குப் பாத நமஸ்காரம்!

இதைப்படிப்போர் நமது சிறுச் சிறுசபையை ஜெபத்தில் தாங்கவேண்டுமென்பதும் எங்கட்குக் கர்த்தர் செய்த கிருபைகட்கு அவருக்குத் துதிசெலுத்தவேண்டும் என்பதும் எமது பணிவானகோரிக்கை. இச்சிறுநூலில் வரும் நிறைவுகள் நன்மைகள் உண்டேல் இதனை எழுதக் கிருபைதந்த அன்பின்தெய்வமே அவைகட்குக் காரணமாவார். அன்றியும், அனுபந்தமாக நூறு கலித்துறைப் பாக்களாலியன்ற "திருச்சிலுவையந்தாதி" என்ற ஒரு சிறு பிரபந்தமும் இதனுடன் சேர்த்திருக்கின்றேன். 1935-ம் ஆ நான் கிறிஸ்துசுவாமியை என் இரட்சகராக ஏற்றுக்கொண்ட நாட்களில் எனது பாவஅகோர அசுத்தங்களையும் அவரது அன்பின்கிருபையையும் ஒப்பிட்டுப்பார்த்தபொழுது இவ் அந்தாதி உருவாயிற்று. இது பூரணமென்று சொல்லேன். எனினும், பாட்டு, பரம்பொருட்கு உவந்ததொன்றென்பது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது கீழ்நாட்டுப் பக்தர்கண்ட பாரம்பரையனுபவம். ஆகலின் சிலருக்கேனும் இதுபயன்படுமென்று கருதி இதனையும் இந்நூலுடன் அவருக்குப் பாதகாணிக்கையாகப் படைக்க முன்வந்தேன்.

இந்நூல்விஷயமாய் உண்டானகஷ்டங்களை, என்னுடன் பகிர்ந்து அநுபவித்தவரும் இவ்வந்தாதியுட் செய்யுட் பிழைகள் வாராவண்ணம் திருத்திப் பார்வையிட்டுத் தந்தவருமாகிய கனம் ஆ. மோசஸ் அவர்கட்கு என் உள்ளான நன்றியைக் கூறுகின்றேன்.

இந்நூலுள் குற்றங்களுண்டேல் அது வியப்பல்ல. அவைகளைப்பொறுத்து திருத்திப்படிக்கும்படி பணிகின்றேன். எல்லா இரகசியங்களையும், எல்லா ஞானங்களையும் வெளிப்படுத்தும் பரிசுத்தாவியானவர்தாமே இதனைப் படிக்கும் நம்முடனும் நமக்குள்ளும் இருப்பாராக. ஆமென்.

உடுத்துறை,
X'mas 1940.

ஆக்கியோன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA CO
1572
LIBR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

காலங்களும் வருஷங்களும் கடந்துசெல்லச்செல்ல மனுஷர்களுடைய ஜீவியங்களும் ஒழிந்துபோகப்போக மாறாத நித்தியானந்தராக இருந்து நம்மை அரவணைத்து ஆதரிக்கும் பெருமானின் இரக்கங்களும் மறந்துவிடப்படுகின்றன. கிறிஸ்து சுவாமியின் அன்பின் பிள்ளைகளாகிய நாம் அவருடைய இரக்கங்களை மறந்துவிடாமல் அதை என்றும் நினைந்து அவருக்கு மகிமையும் துதியும் செலுத்தவேண்டியது நம்மேல்விழுந்த கடமையாகும்.

உடுத்துறை என்ற சிறுகிராமத்துக்கு கர்த்தர்காட்டிய இரக்கவுருக்கங்கள் அளவிறந்தன. அவைகளை நம்மாற் கூடியளவு கவனமாகக் குறித்து எழுதியிருக்கின்றோம்.

இதைவாசிப்பவர்கள் சுவாமி நமக்குச்செய்த எல்லா உபகாரங்களையும் பார்த்து அவருக்கே துதிசெலுத்துவார்களாக!

இதையெழுதப் பிரயாசப்பட்ட சபையாருக்கு என் மனமார்ந்த நன்றியைக் கூறுகின்றேன்.

கிறைஸ்ற் சேட்ச்,
யாழ்ப்பாணம்,
18—12—40

ஜோ. ஏ. றி. நவரத்தினம்
சபைக்குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


பக்கம்

தான்முகம் ... ... ... vii

முன்னுரை ... ... ... x

1. ஆரம்பகாலம் ... ... ... 3
2. சிமன்ஸ்ஐயர் காலம் ... ... ... 7
3. கிறிவித்ஐயர்காலம் ... ... ... 12
4. பிக்ரேவொட்ஐயர்காலம் ... ... 17
5. கோன்லிஐயர்காலம் ... ... ... 20
6. கனான்ஐயர்காலம் ... ... ... 22
7. பிற்காலம் ... ... ... 26

பிற்கட்டு :

ஆலயக்கட்டுக்குப் பணம் உபகரித்தோர் நாமாவளி i

ஆலயக்கட்டுக்குப் பொருள் உபகரித்தோர் ... v

அனுபந்தம் A ... ... ... vi


அனுபந்தம் B ... ... ... viii



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE
1872.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாகனம் மார்க் காப்பென்ரர் காரியர்
அத்தியட்சர் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(32-ம் பக்கம்)

# உடுத்துறைச்சபையின் விசித்திர சரிதம்

“இருளில்நடக்கிற சனங்கள் பெரியவெளிச்சத்தைக் கண்டார்கள். மரணஇருளின்தேசத்திலே குடியிருக்கிறவர்கள் மேல் வெளிச்சம்பிரகாசித்தது” என்றுரைக்கப்பட்ட ஏசாயா தீர்க்கதரிசியின் (ஏசா. 9 : 2) தீர்க்கதரிசின நிறைவேற்றமோ என்று அதிசயிக்கும்படியாக கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தமது வெளிச்சத்தை, மரணஇருளும் விக்கிரகபக்தியும் நிறைந்த இவ்வுடுத்துறைக் கிராமத்தில் அற்புதமாக, தமது மக்கள்மூலமாகத் தந்தருளச் சித்தங்கொண்டார். அவருக்கே சதாகாலங்களிலும் சர்வமகிமையும் கனமும் துதியும் நிறைவதாக. ஆமென்.

இவ்வாறாகக் கிருபைத்தடங்கடலாகிய இரட்சண்ய மூர்த்தி கஷ்டங்கள், பிரயாணத்தடைகள், எதிர்ப்புகள், மன இருள், ஆகிய தடுப்புச்சுவர்களை இடித்து, நமதுகிராமத்தில் தமது திருச்சபையை ஸ்தாபித்த வரலாறும், அதைப் பொன்னைப் புடமிடல்போலப் புடமிட்டு, மென்மேலும் வளர்த்த வரலாறும், பாவ ஆசாபாசங்களினால் சிக்குண்டு அலைந்த நமது கிராமத்தார் பலர் இவ்அன்பின் ஒளிக்குள் அடியெடுத்துவைத்து பயன்பெற்ற வரலாறும் நாம் கண்டு கேட்டு ஊகித்தளவில் ஆராய்வது நமக்கும் பிறர்க்கும் பயனும் மகிழ்வுமுண்டாகும். தெய்வநாமத்துக்கு மகிமையுமுண்டாகும்.

இக்கிராமம், யாழ்ப்பாணக்குடாநாட்டில், யாழ்ப்பாணப் பட்டினத்துக்குக்கிழக்கே 33 மைல் தூரத்தில், பளைஎன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடுத்துறைக் கிராமம்**

இடத்திலிருந்து கிழக்கே 9 மைல் தூரத்தில் அமைந்து கிடக்கின்றது. மேற்கே வத்திராயன், மருதங்கேணி எனுங் கிராமங்களும், கிழக்கே ஆளியவளை எனுங் கிராமமும் உள்ளன. இப்பொழுது கிறிஸ்தவர்கள் இந்நான்கு கிராமங்களிலும் இருக்கின்றனர். சுமார் 100 வீடுகளையுடையது இவ்வுடுத்துறைக்கிராமம். வடக்கே கடலுண்டு. தெற்கே ஒரு உப்பாறுண்டு. அழகிய வெண்மணற்செறிவும் குறுமரக் காடும், செழித்த வயல்நிலங்களும், சிறுபயிர்த்தோட்டங்களும் நிறைந்த கிராமம் இது. தென்னையும் பனையும் எங்கும் காணப்படும். மிகுதியானவர்களின் விசேடதொழில் மீன்பிடித்தொழிலே. ஆண்டவர் பாதம்சிவக்க நடந்துதிரிந்த திருசேதான் கிராமங்கள்போன்ற கடற்கரையுமுண்டு. இவ்வகைச் சிறப்பெலாம் நிறைந்திருந்ததேனும் அந்தகார இருளால் ஆதியில் மூடப்பட்டிருந்தது இக்கிராமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1. ஆரம்பகாலம்

இவ்வுடுத்துறைக்கிராமமானது கி. பி. 1850-ம் ஆண்டளவில் அந்தகார இருளால் மூடப்பட்டிருந்ததுமாத்திரமல்ல, பிரயாணவசதிக்கேற்ற சாதாரண ரஸ்தாக்கள்கூட இல்லாமல் இருந்தது.

**ரோம்ரன்துரையும் வயவீல்ட் துரையும்**

அக்காலத்தில், "ரோம்ரன்" "வயவில்ட்" என்ற இரு ஆங்கிலதேசத்துக் கிறிஸ்தவபக்தர்கள் இக்கிராமத்துக்கு வரலாயினர். எவ்வளவோ துன்பங்களையும் பாதைக்கஷ்டங்களையுங்கடந்து இங்கு வந்துசேர்ந்த இவ்விரு துரைமாரும் இங்கே இன்றைக்கும் பாழடைந்திருக்கின்ற இரண்டு தென்னந்தோட்டங்களை, தமக்கெனவாங்கி வசித்துவரலாயினர். இவர்களது வருகையாலும் தோட்டமுயற்சியாலும் இக்கிராமச்சனங்கட்கு மிகுந்த பொருள்வருவாயும், தொழிலும், மகிழ்வும் உண்டாயின. இக்கிராமத்தாரின் இருதய இருளையும், அறியாமையையும், மேய்ப்பனற்ற ஆடுகளைப்போல கண்டகண்ட தேவர்களையும் பைசாசங்களையும் வணங்கி தங்கள் சிருஷ்டிகர்த்தாவை—தங்கள் சொந்தப் பிதாவாகிய அன்பின் தெய்வத்தை அறியாமல் சீவிக்கும் பரிதாபத்தையும் கண்டு மனதுருகி இத்துரைமார், சுவிசேஷ ஒளியால் இக்கிராமம் புனிதமுறல் வேண்டுமென்றெண்ணி, கடவுளின் வேலையைச் செய்யத் தொடங்கினர். இவர்களை இயேசுசுவாமி இக்கிராமத்தில் திருக்கோலங்கொண்டு எழுந்தருளுவதற்கு அனுப்பப்பட்ட முந்தூதர் என்று கூறினும் அது மிகையாகாது. இக்காலத்தில் இங்காவது பச்சிலைப்பளிப்பகுதியிலாவது பளைப்பகுதியிலாவது ஒரு கிறிஸ்தவர்களேனும் இருந்ததில்லை. இவர்கள் உடுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறையின் மேற்கெல்லையில் ஒரு தமிழ்ப்பாடசாலையை ஸ்தாபித்து அதையே மையஸ்தானமாகவும் சுவிசேஷ ஸ்தாபனமாகவும்கொண்டு, கடவுளின் சுவிசேஷ வேலையை விருத்திபண்ணத் தொடங்கினர். இப்பாடசாலையே* இப் பச்சிலைப்பளிப் பகுதியில் முதன்முதற் கட்டப்பட்ட பாடசாலையென்பது குறிப்பிடத்தக்கது.

உடுத்துறைப் பாடசாலை ஸ்தாபகம்

இத்தோட்டத்துரைமார் இங்கிலாந்துத் திருச்சபையின் (C. M. S.) அங்கத்தவர்களாதலின் யாழ்ப்பாணத்திலிருந்த மேற்குறித்த திருச்சபைக்கெழுதி இப்பாடசாலைப்பொறுப்பைக் கையேற்றுநடத்தும்படி வேண்டிநின்றனர். ([illegible] வித்தியாபகுதியார் பாடசாலைகளின்பொறுப்பை அக்காலத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. சிலவருடங்களின்பின் அதாவது "சேர் ஹேர்கியுல்ஸ் ரொபின்சன்" என்ற தேசாதிபதி காலத்தில் 1869-ம்ஆண்டில்தான் இலங்கையின் பாடசாலைகள் அரசாட்சியாரின் வித்தியாபகுதிக்குள் பொறுப்பேற்கப்பட்டன என்பது இலங்கைச் சரித்திரக்குறிப்பு.) இத்துரைமாரின் வேண்டுகோட்கிணங்கி சிறந்தபக்தனும் தெய்வஅனல் நிறைந்தவருமான கனம் "ஜோர்ஜ் டானியேல்" என்னும் ஆசிரியர் பாடசாலை ஆசிரியராக இங்கு வந்தனர். இவரே பிற்காலத்தில் நமது சபைக்குருவராக இருந்த கனம் எஸ். சீ. டானியேல் போதகர் அவர்களின் தந்தையாவர்.

கனம் ஜோர்ஜ் டானியேல் ஆசிரியர்

இவ்வாசிரியர் தமது சீவிய முன்மாதிரியிலும் கிறிஸ்துவின் அன்புகனியும் வசனங்களினாலும் சுவிசேஷஒளியை இங்கு பரப்புவதிலேயே கண்ணுங்கருத்துமாக இருந்தனர். 1862-ம்ஆண்டு இவருடன் ஆக ஒன்பது கிறிஸ்தவர்

களே இங்கு இருந்தனர். இந்த ஒன்பதுபேரிலும் சிலர் உடுத்துறைக்கிராமத்தாரல்லர்; இவருடன் யாழ்ப்பாணத்தி லிருந்து வந்தவர்கள். இந்தஒன்பதின்மரும்அவ்வாண்டில் ஒரு நாள் இவ்வாசிரியர் கூட்டம்நடத்தி முடிந்தபின் தங்கட்குமுன் இருந்த சோற்றில்தொட்டு அதைச்சாட்சியாக வைத்து கிறிஸ்துசுவாமியைவிட்டுப்பிரியோம் என்று ஆணையிட்டன ராம். இது சரியெனினும் பிழையெனினும் அவர்களுடைய பக்திவைராக்கியத்தைக் காட்டுகின்றது. கற்கோவளம் என்னுமிடத்திலிருந்து இங்குவந்து வைத்தியத்தொழில் செய்துவந்த திரு. வீரபத்திரி என்பவரும், காத்தார் வேலு என்பவரும் தமது பழைய சுபாவங்களை வெறுத்து இரட்சிப்பைக் கண்டடைவதற்கு இவ்வாசிரியரே கருவியாக இருந்தனர். தென்னந்தோட்டத் துரைமார் தமது ஆதினத்திலிருந்து வேலைசெய்த நம்மூர் ஏழைப்பிள்ளை களைத் தமதுபொறுப்பில் பாடசாலைக்கனுப்பி உடைகளும் உணவும் உவந்தளித்து அவர்களை அன்பாய்ஆதரித்து கிறிஸ்து வின் அன்பை கிராமத்தாருக்கு சாதனமுறையிற் காட்டினர். இவ்வாறு இத்துரைமார் தமது பொருளைமாத்திரமல்ல, தேக சுகம், நேரம், ஆடம்பர உல்லாச வைபோகசீவியம் ஆகியன வற்றை கிறிஸ்துவின் அன்புக்காகத் தியாகஞ்செய்தனர். பணம்படைத்து செல்வராய்வாழும் கிறிஸ்தவர்கட்கு இவர்கள் சிறந்த முன்மாதிரிகள் ஆவர். முற்கூறியபடி அக்காலத்தில் பாடசாலைகள் அரசாட்சியாரின் பொறுப்பில் இல்லாமையால் இப்பாடசாலையை நடத்திவந்த இங்கிலாந்து திருச்சபையின் யாழ்ப்பாணக் கிளைச்சங்கத்தில் பணமுடை ஏற்பட இவ் வாசிரியர் திருப்பி அழைக்கப்பட்டார். பாடசாலை நடாத்த ஆசிரியர் இல்லையேயென்று கடவுளிடம் குறையிரந்தபோது இவ்வூர்ப் பிறப்பாளரும் மிகுந்த பணமும் மதிப்பும் உடைய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசிரியர், திரு. மாதர் ஆனந்தர் அவர்கள்**

வருமாகிய திரு. மாதர் ஆனந்தர் எனும் பெரியார் தாமே வேதனையின்றி இலவசமாக கிறிஸ்தவ கட்டுப்பாட்டுக்கிணங்கி பாடசாலையை நடாத்த முன் வந்தனர். இவர் பெருத்த சைவசமய அநுசாரியாக இருந்தபோதிலும், கிறிஸ்தவ சபைப்பிரமாணங்கட்குட்பட்டு பிள்ளைகட்கு இலவசமாகக் கல்வியளிக்க ஒருப்பட்டுவந்தமை, இவரது பெருந்தன்மையறிவைக் காட்டுவதுமாத்திரமல்ல, கல்லுகளிலிருந்தும் ஆபிரகாமுக்குப் பிள்ளைகளை உண்டுபண்ண வல்லவராகிய தெய்வத்தின் கிருபையையும் நன்கு காட்டுகின்றது. "இக்கிறிஸ்தவ பாதிரிமார் சுயநன்மையிழந்து பலவிதகஷ்டமும் அநுபவித்து கிறிஸ்துவைக் காட்டுவதால் இவர்களிடம் உண்மைச் சத்தியம் இருக்கவேண்டும்" என்று இப்பெரியார் யோசித்து சைவசமயமாக இருந்தபோதிலும் ஊழியர்களோடு துணைநின்று, உற்சாகமாக வேலைசெய்யும்படி கடவுள் இவரை ஏவினார். இவ்வாறு இவர் தெய்வீக வழிநடத்துதலினால் சபைவளர்ச்சிக்குறுதுணையாயிருந்தனர். இங்ஙனம் இக் கல்விக்கழகம் 'கிரிமிசையேற்றிய கிளரொளித்தீபம்போல' கிறிஸ்துவின் ஒளியை நாளுதிக்கிலும் பிரதிவிம்பித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE
1872

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சங். கனம்
J. D. சிமன்ஸ் ஐயர்
(7-ம் பக்கம்)



சங். கனம்
E. M. கிறிவிந் ஐயர்
(12-ம் பக்கம்)



சங். கனம்
W. J. கனன் ஐயர்
(22-ம் பக்கம்)



கனம் ஜோர்ஜ்
டானியேல் அவர்கள்
(4-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. சிமன்ஸ் ஐயர் காலம்

**ஆசிரியர், திரு. சலமன் அவர்கள்**

சிலகாலங்கள் செல்ல, அதாவது 1874-ம் ஆண்டு மார்கழி மாதம் 24-ந் தேதியிலன்று யாழ்ப்பாணத்தின் இங்கிலாந்து திருச்சபைக்குத் தலைமை மிஷனரியாக சங்கைதங்கிய கனம் J D. சிமன்ஸ் ஐயரவர்கள் வந்து நம் கிராமத்திலும் ஊழியஞ்செய்ய இங்கு வந்தனர். இவர் கி. பி. 1875-ம் ஆண்டில் திரு. சலமன் என்னும் பெரியாரை இப்பாடசாலை ஆசிரியராக இங்கனுப்பிவைத்தனர். இவ்வாசிரியரே பிற்காலத்தில் நம்மில் அன்புகூர்ந்தும் நம்மால் அன்புகூரப்பட்டும் இருந்து மறுமைக்குட்சென்ற கனம் I. S. இரத்தினம் போதகரவர்களின் தந்தையாவார். இவ்வுபாத்தியாயர் கிறிஸ்துவுக்குள்ளான உள்ளுணர்வுடனும் அன்புடனும் கல்வியையும் ஆத்மஞானத்தையும் ஒருங்கே திரட்டிப் புகட்டி வருவாராயினர். கனம் சிமன்ஸ் ஐயரவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து பன்முறையும் காடும்மேடுங் கடந்து கஷ்டத்துடன் வந்துபோவது வழக்கம். ஆறடி ஏழடி ஆழமுள்ள உப்பாற்றை நீந்தியும் கழுத்தளவு தண்ணீரில் நடந்தும் இவர் பன்முறை நம் கிராமத்துக்கு சுவிசேஷத்தை—கிறிஸ்துவின் அன்பைச் சுமந்துகொண்டு வருவார். வந்து கடற்கரையோரங்களில் நடந்துதிரிந்து, பசியில், தாகத்தில், அவமதிப்பில், எளனங்களில் தைரியமாக தெய்வஅன்பால் ஏவப்பட்டு ஊழியஞ்செய்துகொண்டு வந்தனர். இவர் கடற்கரையோரங்களில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும் நம் முன்னோர்மத்தியில் செல்வார் என்றும், அவர்கள் அக்காலத்தில் கிறிஸ்தவர்களைத் [illegible], அவர்கள் தங்கள் வீடுகளில் மிதிப்பதும், அவர்கட்கு உணவுகொடுப்பதும் மகா தீட்டானகாரியம் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணியிருந்தபடியால் இவருக்கு உணவாவது தாகத்திற்கு நீராவது கொடாமலும், இருப்பதற்கு ஆசனம் ஒன்றும் கொடாமலும், ஒரு அழுக்கான உரலைக்கொடுக்க அதில் இவர் இருந்துகொண்டு கடவுளின் அன்பைப் பிரசங்கிப்பாரென்றும் பின் பசியோடும் தாகத்தோடும் ஆற்றையுங்கடந்து 9 மைல் தூரமான பளைக்குச்சென்று அங்கே பசியும் தாகமும் தீர்த்து யாழ்ப்பாணம் செல்வாரென்றும் கூறப்படுகிறது. இந்த ஆங்கிலேயபக்தன் தமது சொகுசுகளையும், சௌகரியங்களையும், ஆங்கில நாகரீகஉல்லாசங்களையும் வெறுத்துத்தள்ளி, சுகத்தையிழந்து, பணத்தையிழந்து, மதிப்பையிழந்து நாம் நினைக்கவும்முடியாத இத்தனை கஷ்டங்களை அனுபவித்து தமது எசமானுடைய சிலுவையைச் சுமந்த இந்நிகழ்ச்சியால் நமதுகிராமத்தில் சபை கட்டப்பட்டது. பலர் இரட்சிக்கப்பட்டனர். நம்முடைய இருதயமும் உருகுகின்றது. நமது பரிசுத்த தேவாலயத்தின் அடியிலுள்ள அத்திவாரத்திலே இவர் தம்மைப் பிழிந்துகசக்கிய இரத்தமும் இவர்பாடுகளின் பிரயாசமும் சேர்ந்துகிடக்கின்றன என்பது மிகையாகமாட்டாது. பல சாக்குப்போக்கானநியாயம் கூறிக்கொண்டு பிரயாசையின்றியிருக்கின்ற கிறிஸ்த ஊழியர்கட்கும் ஏனையோர்க்கும் இவ் ஐயர் முன்மாதிரியாகக்கடவர்.

இங்ஙனம் இவ்வையரும் சலமன் ஆசிரியரும் மகா பிரயாசையாய்க் கிறிஸ்துவின்ஒளியை வாயினால் மாத்திரமல்ல, தங்கள் நடைஉடைபாவனைகளாலும் பரப்பிவந்தனர். இச்சலமன் ஆசிரியரே, பிற்காலத்தில் சிறந்த சாட்சியும் நமது சபை உபதேசிகராகவுமிருந்த திரு. D. S. சின்னத்தம்பி என்பவரை அவரது நுண்ணறிவையும் ஆத்மவிசாரத்தையும் கவனித்து அதிக பிரயாசையோடு கோப்பாய்ப் பாடசாலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கும்படி ஒழுங்குசெய்து அவரது உயர்வுக்கு மிக உதவியாக இருந்தனர்.

**கனம் J. பேரின்பநாயகம் அவர்கள்**

இக்காலங்களில் பளை, எழுதுமட்டுவாள் என்னுமிடங்களிலும் சுவிசேஷ பிரபல்யஊழியம் ஆரம்பமாயிற்று. கனம் J. பேரின்பநாயகம் அவர்கள் பளையிலிருந்து ஊழியம்செய்ததோடு நமது கிராமத்துக்கும் பன்முறையாக வந்து நன்முறையாக ஊழியஞ்செய்தனர். சிறிது காலம் செல்ல இவருடைய இடத்தில் கனம் J. பெக்காஸ் அவர்கள் போதக உபதேசிகராக நியமிக்கப் பட்டு இங்கு வரலாயினர்.

**கனம் J. பெக்காஸ் அவர்கள்**

இவர், பளை எழுதுமட்டுவாள் என்னுமிடங்களிலும் விசேஷமாய் உடுத்துறையிலும் அதிக முயற்சியோடு சுவிசேஷஊழியஞ் செய்து கொண்டு வந்தனர்.

**ஆசிரியர், திரு. தேவசகாயம் அவர்கள்**

இக்காலத்தில் திரு. சலமன் ஆசிரியரவர்களினிடத்தில் திரு. தேவசகாயம் ஆசிரியரவர்கள் அமர்ந்து வேலைசெய்து வந்தனர். இவரும் முக்திய ஆசிரியரின் ஆவியுள்ளவர். அதாவது கல்விப்பாட்டங்களோடு கடவுளின் சுவிசேஷ ஒளியையும் பிள்ளைகளிலும் பெற்றாரிலும் பிரகாசிக்கும்படி தீவிரமுயற்சியெடுத்துவந்தனர். இவருக்குப் பக்கத்துணையாக கனம் J. பெக்காஸ் அவர்களும்வர இருவருஞ்சேர்ந்து நல்லூழியம் செய்துவந்தனர். இவ்விருவருமே திரு. D. S. சின்னத்தம்பி உபதேசியாரவர்கள் பிற்காலத்தில் வதுவைசெய்த "சேரா அன்னம்மா" என்பவளை அரிய பிரயாசையோடு நல்லூர் விடுதிப் பெண்பாடசாலையில் சேர்த்துப் படிக்கவைத்தனர். அவ அங்கேதானே கடவுளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரட்சண்ய புண்ணியங்களை உணர்ந்து கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானமெடுத்து பரிசுத்த சீவியத்துக்குள் அடியெடுத்து வைக்கத் தொடங்கினர். பரிபூரணம் என்னும் ஒரு பெண்ணும் இங்கிருந்து நல்லூர்க்குப் படிக்கச்சென்று கிறிஸ்தவள் ஆனர். இவ்வாறு அனேக ஆத்துமாக்களின் இரட்சிப்புக்கு கனம் பெக்காஸ் போதகரவர்கள் கருவியாயினர். இவரும் பன்முறை மாரிகாலங்களில் ஆற்றுப்பெருக்கையும் கவனியாமல் நீந்தியும் கடந்தும் இங்கு வந்துபோவது வழக்கம். ஒருமுறை இவர் பிரசங்கஞ் செய்துகொண்டிருந்தபொழுது உடுத்துறையில் இருந்த................................என்பவரும் அவரைச்சேர்ந்தவர்களும் இவரைக் கையும் காலும் கட்டி வருத்தினர்களாம். பொங்கியெழுந்து முன்னிலையில் கைகள் கட்டப்பட்டுநின்ற தமது அன்பின் எசமானை நோக்கியவராய் தமது கட்டுண்டநிலையிலும் தைரியமாய் கடவுளின் அன்பைக் கூறினராம். இவரைக் கட்டிவைத்தவரின் மகன் பிற்காலத்தில் இப்போதகரவர்களின் வீட்டிலேயே வேலையாளாக இருந்தார் என்றும், இவர் தமக்கவர்கள்செய்த தீமையை மறந்து அவர்கட்குப் பணவுதவியும் செய்தனர் என்றும் அறிகிறேம். தீமையை மறக்கும் இம் மறதிக்குணம் கிறிஸ்தவர்களாகிய நமக்கு இன்றியமையாத இலட்சணமாகும்.

"நீ முதிர்வயதுள்ளவனுகும்போது உன்கைகளை நீட்டுவாய். வேறொருவன் உன் அரையைக்கட்டி உனக்கு இஷ்டமில்லாத இடத்துக்குக் கொண்டுபோவான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்." யோ.21:18

என்று உயிர்த்தெழுந்த கடவுள் தமது அன்பனுகிய பேதுருவுக்குச் சொன்ன அருமைத் திருமொழிகளை நாம் இப்போதகரவர்களின் அனுபவத்தில் கண்டோம். கிறிஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவின் அன்பு நெருக்கிவினதால் நமதுசபை கட்டப்படுவதற்கு தமது கையும் காலும் கட்டப்பட்டார். இவரோடு சேர்ந்து வேலைசெய்துவந்த திரு. தேவசகாயம் ஆசிரியரின் இடத்தில் திரு. ஞானாரம்பம் சடையர் என்பவர் அமர்ந்து கிறிஸ்துவின் ஊழியத்தைத் தொடர்ந்து நடத்தினார். இவரே பிற்காலத்தில் நமது சபையுபதேசியாராக இருந்த கனம் D. P. முத்தத்தம்பியவர்களின் தமையனாராவர். வேம்போடுகேணி என்றவூரில் படிப்பித்துக்கொண்டிருந்த கனம் D. S. சின்னத்தம்பி என்பவரும் இவ்வாசிரியரும் செபத்திலும் சுவிசேஷ ஊழியத்திலும் தரித்துவருவது வழக்கமாகவிருந்தது. ஓய்வுநாள் ஆராதனைக்கு ஒருவருமில்லாத இவ்விருவரும் மாத்திரமே கூடிச்செபித்துவந்தனர். இவர்கட்கு கனம் பெக்காஸ் போதகரவர்களும் துணையாக இருந்து உற்சாகமூட்டிவந்தனர். இக்காலமுடிவில் அதாவது கி. பி. 1880 ம் ஆண்டளவில் நமதுசபை ஒருபோதும் மறக்கமுடியாத சங்கைதங்கிய கனம் சிமன்ஸ் ஐயரவர்கள் இளைப்பாறி இவ்விடம்நீங்கி வேற்றிடம் சென்றனர். இவ் ஐயரவர்களின் அருமையும் பெருமையும் கூறற்கரிதாகும். 1858-ம் ஆண்டில் பாளையங்கோட்டை வித்துவான் H. A. கிருஷ்ணபிள்ளை என்ற பரிசுத்தவான் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவும் ஞானஸ்நானம்பெறவும் இவ்வையர் காரணமாக இருந்தனராம். அவர் அவ்வாண்டு சித்திரை மாதம் 18-ந் தேதி மைலாப்பூர் ஆலயத்தில் ஞானஸ்நானம்பெற்றபொழுது இவ் ஐயரவர்களே பிரசங்கம்செய்தார்களாம். இவ்வாறு அளவிடற்கரிய தெய்வபக்திநிரம்பிய வித்துவான் கிருஷ்ணபிள்ளையவர்களின் குருவை, நாம் அனுபவிக்கக்கிடைத்த சிலாக்கியத்தை நினைக்க இதயம் உருகுகின்றது. மயிர் பொடிக்கின்றது. ஆச்சரியமும் பயமும் உண்டாகின்றன.

ஆசிரியர் திரு. ஞானாரம்பம் சடையர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3. கிறிவித்ஐயர்காலம்

**திரு. N.L. யோசுவா**

சீமன்ஸ் ஐயர்காலம் எவ்வாறு நமது சபை கட்டப்பட்டு வளர்ந்தோங்குவதற்குதவியதோ அஃதேபோன்று சங்கை தங்கிய கனம் E. M. கிறிவித் ஐயரவர்கள் காலத்திலும் மகா விசேஷமான அரியசேவைகள் செய்யப்பட்டன. கி. பி. 1882-ம் ஆண்டு மாசிமாதம் இவர் தலைமை மிஷனரியாக நியோயிக்கப்பட்டுவந்ததும் உடுத்துறைக் கிராமத்தையும் ஆங்குள்ள பாமரமக்களையும் நினைந்து மனமுருகி ஆத்துமசுகம் மாத்திரமல்ல தேகசுகமும் காக்கப்படவேண்டுமென்றெண்ணி திரு. N.L யோசுவா எனும் வைத்திய ஊழியனை இங்கனுப்பி வைத்தனர். இவ்வூழியன் பலமாசங்களாக இங்குள்ளாரின் நோய்பிணிகள் அகலுமாறு புதிய வைத்திய முறைகளால் நன்மைசெய்துவந்தனர். பின் இவர் அரசாட்சியாரின்கீழ் உத்தியோகமாகப் பிரிந்து சென்றனர்.

**கனம் D. S. சின்னத்தம்பி உபதேசியாரவர்கள்**

இஃதிவ்வாறாக, முன்னரே திரு. "சலமன்" ஆசிரியரால் கோப்பாயில் படிக்க ஒழுங்குசெய்யப்பட்டவரும் வேம்போடுகேணியில் ஆசிரியராயமர்ந்து சுவிசேஷ பிரபல்லியத்துக்குப் பாடுபட்டவருமாகிய கனம் D. S சின்னத்தம்பி அவர்களை கனம் கிறிவித்ஐயரும் பிறரும் சுதேசமிஷனரிச் சங்கத்தின்மூலமாக (தற்போது J. C. M. A. எனப்படுவது அக்காலம் N. M. S. என்னப்பட்டது) உபதேசியாராக நியமித்து இங்கு அனுப்பி வைத்தனர். கனம் பெக்காஸ் போதகரவர்களால் நல்லூரில் படிக்க ஒழுங்குசெய்யப்பட்ட ஸ்ரீமதி சேரா அன்னம்மா என்பவளை இவர் வேம்போடுகேணியில் ஆசிரியராய் இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனம் D. S. சின்னத்தம்பி
உபதேசியாரவர்கள்
(12-ம் பக்கம்)



கனம் J. பெக்காஸ்
போதகரவர்கள்
(9-ம் பக்கம்)



கனம் S. இரத்தினதிக்கம்
போதகரவர்கள்
(27-ம் பக்கம்)



கனம் S. C. டானியேல்
போதகரவர்கள்
(26-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE 1872 LIBRARY
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுது துணைசெய்திருந்தனர். இக்காலத்தில் இவர் உத்தமவூழியனாய் வேலைசெய்யத்தொடங்கினபொழுது இவரும் தெய்வீக அன்பால் ஏவப்பட்டு தமது நாயகனுக்கு உறுதுணையாக இருந்து சுவிசேஷவூழியத்தில் மிகவும் பங்கெடுத்து வந்தனர். இவர்கட்குதவியாக கனம் பெக்காஸ் போதகரவர்களும் சேர்ந்து ஊழியம்செய்ய கனம் கிறிவித் ஐயரவர்களும் இவர்கட்கு உறுதுணையாயிருந்து ஊக்கப்படுத்தி வந்தார். இவ்விதமாகச் சபாநாயகராகிய கிறிஸ்துபெருமான், தாம் தொடங்கின தமது வேலையை முற்றமுடிய நடாத்தி வளர்ப்பதற்கு இவ்வுபதேசியாரவர்களைத் தமக்கேற்ற பாத்திரமாகத் தெரிந்துகொண்டார். இத் தம்பதிகளிருவரும் மற்றவர்கட்கு இரட்சிப்பைக் கூறுமுன் தமது பெற்றார் உடன்பிறந்தார் சுற்றத்தாரை இம் மகாபெரிய இரட்சிப்புக்குள் நடத்தவேண்டுமென்றெண்ணுவாராயினர். ஆகவே இவர்களது ஊக்கமான வேண்டுதல்களினாலும் அரிய சாதனை போதனைகளினாலும் இவரது மனைவியாரின் தந்தையாராகிய திரு. கந்தப்பர் என்பவர் ஆசீர்வாதம் என்னும் பெயருடனும் தாயாராகிய ஆழ்வாத்தை என்பவ சமாதானம் என்னும் பெயருடனும் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்பெற்றுக்கொண்டனர். இவர்கள் மாத்திரமல்ல இவர்களது ஏனையமக்களாகிய யோசேப் சின்னத்தம்பி, மேரி செல்லமுத்து, ஞானம்மா சின்னப்பிள்ளை, பரிபூரணம் பொன்னாச்சி என்பவர்களும் கிறிஸ்தவர்களாயினர். இங்குக் கூறப்பட்ட கனம் யோசேப் சின்னத்தம்பி அவர்கள் தமிழாசிரியராயிருந்து இளைப்பாறி வயோதிபராக இன்னும் கிறிஸ்துவின் பாதத்துக்குள் சீவிக்கின்றார். இவரது பிள்ளைகள் இலங்கையின் பலபாகங்களிலும்

கனம் யோசேப்
சின்னத்தம்பி
அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகமாகி நமது சபைக்குத் துணையாய்த் தங்கள் எசமானாகிய கிறிஸ்துசுவாமியின் நாமத்துக்கு மகிமையாய் வாழ்கின்றனர்; இவரை தெய்வம் ஆசீர்வதித்தார். பிற்காலத்தில் ஏற்பட்ட ஆலயக்கட்டுக் கொம்மிற்றிக்கு இவரே தலைவராக இருந்தமையும் நமது ஆலயங்கட்டப்படற்கு நிலமும் தருமகாணிக்கையாக கொடுத்துதவினமையும் இவரை நினைக்கும்பொழுது நாம் ஆண்டவருக்குள் மறக்கமுடியாது. உபதேசியார் அவர்களது தமையனும் குடும்பத்தாரும் இவர்களது ஸ்வீகார புத்திரியாகிய வள்ளியம்மை ஆச்சிக்குட்டி என்பவளும் கிறிஸ்துவின் ஒளிக்குட் பிரவேசித்தனர். இவர்களை மனந்திரும்பிக் குணப்பட்ட பெற்றாரும் உடன்பிறந்தாரும் உறவின்முறையாருமாவர். இவர்கள் மாத்திரமல்ல, பிற்காலத்தில் இச்சபை உபதேசியாராக இருந்து விசேஷ ஊழியஞ்செய்து இப்போ இளைப்பாறி இருப்பவராகிய கனம் டேவிட் பு. மூத்ததம்பி அவர்களும், அவரது சகோதரரும் ஆசிரியசேவை செய்தவரும் இப்போது கிறிஸ்து சுவாமியின் திருமடியிற் சென்றிருப்பவருமாகிய கனம் யோசேப் பு. இளையதம்பி அவர்களும், சகோதரிகளாகிய சின்னப்பிள்ளை அருளம்மா, வீராத்தை கிருபை என்பவர்களும், திரு. மூத்ததம்பி தேவசகாயம் என்பவரும் இவரது பிள்ளைகளாகிய குணநாயகம், பொன்னர் எலிசபெத், வள்ளிப்பிள்ளை ரூத் என்பவர்களும் ஆகிய இவ் எல்லாரும் கிறிஸ்தவர்களாகி கிறிஸ்துவின் ஆழ நீள மகல முயரமற்ற அன்பை ருசிக்க இவ் அருமையான உபதேசியாரவர்களையே பரம தெய்வம் பாவித்தருளினார். இங்கு கூறப்பட்ட கனம் டே. பு. மூத்ததம்பியவர்களது தமையனும் சிறந்த செந்தமிழ்க் கவிபாடும் வரமுடைய புலவரும் ஆசிரியருமாயிருந்து காலஞ் சென்ற சின்னக்குட்டி ஞானரம்பம் அவர்கள் *குணப்பட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானஸ்நானம் பெறுவதற்கும் இவரே கருவியாயினர். அன்றியும் இக்கிராமத்தாராகிய பலரும் இவ் உபதேசியாரின் சாதனைபோதனைகளால் கிறிஸ்துவின் மந்தைக்குட் சேர்க்கப்பட்டனர். அவர்கள் பின்வருவோர்:- சைவசமயப் பக்தனும் கோவில் அர்ச்சகருமாயிருந்த கதிர்காமர் யோன் என்பவரும், மகனாகிய கணபதிப்பிள்ளை வேதமுத்து என்பவரும், சலமன் சினியர் என்பவரும், நாகமுத்து நாத்தான்வேலும், மனைவியும், மகனாகிய நல்லதம்பி யோவானும், கணபதிப்பிள்ளை வைராக்கியம் என்பவரும், அவரது மனைவியும், மக்களாகிய ஆபிரகாம் வல்லிபுரம், மோசே வேலுப்பிள்ளை என்போரும் பிறருமாவர். இவர்களிற் பிற்கூறப்பட்டோரிற் சிலர் பின்வாங்கினரேனும் இவரது தளராமுயற்சியானது இச்சபை கட்டப்படற்கும், அநேகரின் ஆத்தும ஆறுதலுக்கும் பரிசுத்த சீவியத்துக்கும் மிகப்பெரிய ஏதுகரமாயிற்று.

**கனம் D. P. மூத்ததம்பி ஆசிரியர்**

இக்காலத்தில் இங்குள்ள பாடசாலையின் ஆசிரிய ஊழியனாக கனம் D. P. மூத்ததம்பியவர்கள் 1889-ம் ஆண்டு மாசிமாதம் 1-ந் தேதி பாடசாலைப் பொறுப்பையேற்று வழக்கமாகக் கல்விபுகட்டியமையோடு தெய்வஒளி பிரகாசிக்கவும் பெருமுயற்சி செய்துகொண்டு வந்தனர். இவ்வாறு இவ் ஆசிரியரும், உபதேசியாரும் சுவிசேஷ ஊழியம் செய்துகொண்டுவரும்போது 1890-ம் ஆண்டு பங்குனிமாசம் 13-ந் தேதியிலன்று சங்கைதங்கிய கனம் E. M. கிறிவித் ஐயரவர்கள் கிறிஸ்துசுவாமியின் பதநிழலடைந்தனர். 1895-ம் ஆண்டு கார்த்திகை மாசம் 30-ந் தேதி 11000 ரூபாய் செலவில் கட்டிமுடித்து பிரதிஷ்டைபண்ணப்பட்ட பளைத் தேவாலயத்துக்கு இவரது பெருமுயற்சியால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1889-ம் ஆண்டு ஐப்பசி மாசம் 15-ந் தேதி மூலைக்கல்லு வைக்கப்பட்டமையும் இவ்ஐயரை நினைக்கும்பொழுது நாம் மறக்கமுடியாது. இவரது இடத்தில் தலைமை மிஷனரியாக சங்கைதங்கிய கனம் J. I. பிக்கேவோட் ஐயரவர்கள் நியமிக்கப்பட்டுவந்தனர். இவரது வருகை நமதுசபைக்கும் கிராமத்துக்கும் பெரிய நன்மையாகமுடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. பிக்வோட்ஐயர்காலம்

கி. பி. 1897-ம் ஆண்டுமுடிய அதாவது ஏழுவருடங் களும் கனம் சின்னத்தம்பியுபதேசியாரவர்கள் செய்யுமூழியத் துக்கு இப்பாதிரியாரவர்கள் பலவழியாலும் உதவிபுரிந்து வந்தனர். அரும்பிரயாசையோடு இவர் இங்குவந்து காடும் மேடும் மணலும் வெளியும் கடலோரமும் நடந்துதிரிந்து ஊழியம் செய்துகொண்டுவந்தனர். இவ்வுபதேசியாரும் ஆத்துமஒளியைப் பலர்பெறும்படி பாடுபட்ட தோடமையாது பலரை இங்கிருந்து கோப்பாய்ப் பாட சாலைக்கும் நல்லூர் விடுதிப்பெண்பாடசாலைக்கும் கொண்டு போய்ப் படிக்கச்சேர்த்து இங்கு கல்விமணமும், சீர்திருத்த நாகரீகவாசனையும் வீசவும் பாதிரிமார்களின் அனுசரணையான உதவியோடு மகாமுயற்சியெடுத்தனர். இக்காலத்தைப்போல கல்வியின் அருமையை உணர்ந்தோர் இங்கு அக்காலத்தில் இருந்தவர்களல்லர். இன்று நம்கிராமத்தில் ஆச்சரியமான மூளைவல்லபமும், படிப்பில் அங்கலாய்ப்பும், தீராதவாஞ்சை யும் உண்டான பிள்ளைகள் பலர் இருந்து பணமில்லா வறு மையால் பெருமூச்சுவிடுகின்றனர். சிலமாசங்கட்குமுன் சுமார் 18 வயதுடைய ஒரு வாலிபன் என்னிடம்வந்து "நான் உங்கள் கிறிஸ்துவை இன்றே ஏற்றுக்கொள்கிறேன். நான் படிக்க வழிதிறந்துதாருங்கள்" என்று கெஞ்சிக்கேட்டான். அவனுடைய பொருத்தனை தவறுடையதேயாயினும் கல்வியில் அவனுக்குள்ள அங்கலாய்ப்பைக் காட்டிற்று. தீராத வறுமை இன்று நம் கிராமத்தில் கல்விக்கெதிராகப் போராடி வெற்றி யடைகின்றது. இது இன்றைய நம்கிராமநிலை. ஆனால் அக்காலத்திலோ பாதிரிமார் இலவசமாகப் படிப்பித்தற்கு பிள்ளைகளைப் பாடசாலைக்குக் கொண்டுபோய்ச் சேர்ப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்குக்கூட பெற்றாரிடமிருந்து சம்மதிபெறுவது மகா கஷ்டமாக இருந்தது. இவ்வுபதேசியாரவர்களை திரு. சலமன் ஆசிரியர் படிக்கக் கூட்டிப்போகும்போது இவரின் தாயார் இவரைக் கூட்டிச் செல்பவர்களையும் அதற்கு ஒத்தாசையான பலரையும் வாயில்வந்தவாறு ஏசித்திட்டி "ஐயோ! என்மகனை அநியாயமாய் எங்கோ தொலைத்துவிடக் கொண்டுபோறார்களே" என்று புலம்பினள் என்று கூறப்படுகின்றது. 'இலவச பணஉதவியும் தந்து பிள்ளைகளை உயர்நிலைக்குக் கொண்டு வருவோம்' என்று பாதிரிமார் மன்றாடியபொழுதும் பிறஇடங்கட்குச் சென்று கல்விகற்பது மகா தோஷமானகாரியம் என்ற நமது பண்டைய கிராம அறியாமைக்கு இன்னுமொரு உதாரணமுமுண்டு.

ஆசிரியராகவும் உபதேசிகராகவுமிருந்து இன்று இளைப்பாறியிருக்கும் கனம் D. P. மூத்ததம்பி அவர்கள் சிறுவராக இருந்தபொழுது கோப்பாய்ப் பாடசாலையில் படிக்கக் கூட்டிப் போகப்படும்போது இவரது தாயார் பின்னாக அழுதுகொண்டு வந்து வழியிலுள்ள, தான் வழிபடும் தெய்வத்தைநோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டு "என்பிள்ளையைப் பாடசாலையில் சேர்க்க அவர்கள் மறுத்து திருப்பி அனுப்பிவிடும்படி நீ உதவிசெய்யவேண்டும். அப்படி நீ செய்தால் உனக்குப் பூசைசெய்வேன்" என்று பொருத்தனைபண்ணினள் என்றும் அறிகின்றோம். அதுமாத்திரமல்ல, 1929-ம் ஆண்டு எனது தமையனார் என்னைப் படிப்பிக்கும்படி தெல்லிப்பளைப் பாடசாலையில் கொண்டுபோய்ச்சேர்க்க முயற்சிசெய்தபொழுது எனது தாயார் அதற்கு மறுத்து நின்றா. ஆனாலும், எனது உயர்வைவிரும்பிய என் அருமைத் தமையனார் என்னைக் கொண்டுபோகும்படி பிடிவாதம் செய்தபொழுது, "நீ படிக்கப்போ; ஆனால் கிறிஸ்தவனாகி எங்கள் சந்ததிக்குப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழிதேடிப்போடாதே" என்று கண்டிப்பாக எனக்குக் கட்டளையிட்டு, தமையனாரையும் எச்சரித்து, அரைமனதுடன் ஒருப்பட்டார் என் மாதா.

இத்தகைய நிலைபரத்தில் இலவசமான கல்வியைக் கொடுக்கவும் பலவந்தமாகப் பிள்ளைகளை அழைக்கவேண்டிய காலமாகஇருந்த அந்நிர்ப்பந்தமான அறியாமையின்காலத்தில் இவ்வுபதேசிகரவர்கள் பலரை இங்கிருந்து பெரிய பாடசாலைகட்கனுப்பிப் படிப்பித்தனர் என்பது அக்காலத்தின் கோலப்படி அவருக்கு மகா பிரயாசையாகவும் நமக்கு வியப்பாகவும் இருக்கவேண்டியதே. இவரால் படிக்க ஒழுங்குசெய்யப்பட்டு உயர்வடைந்தோர் பலர். அவர்களுள் இவரின் மைத்துனியும் கனம் D. P மூத்ததம்பி உபதேசிகரவர்களின் பத்தினியாராய் இருந்த தெய்வபக்தி நிரம்பிய மேரி செல்லமுத்து என்பவளை இங்கு குறிப்பிடுகின்றோம்.

அப்பால் நம்மவர்மனத்தைக் கொள்ளைகொண்டு சபை வளர்ச்சிக்கு தமது சீரியநடையால் உதவிசெய்த சங்கை நிறைந்த கனம் பிக்வோட் ஐயரவர்கள் மாறி வேறிடஞ்செல்ல அவரது ஸ்தானத்தில் சங்கைதங்கிய H. கோவ்லி ஐயர் அவர்கள் 1897-ம் ஆண்டு வைகாசியில் இங்கு நியமிக்கப்பட்டனர். இவர் தற்பொழுது கொழும்பு அத்தியட்சராக இருக்கும் மகாகனம் C. D. கோவ்லி அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5. கோஸ்லிஜயர்காலம்

இவர் யாழ்ப்பாணத்தில் இருந்த ஐந்துவருஷங்களிலும் தமது உடுத்துறைக்கிராமத்தை நினைந்து அதற்காக அநேக பாடுகள்பட்டனர் என்றும் தன்னயமற்ற நன்னலஊழியஞ் செய்தனர் என்றும் அறிகின்றோம். இவர் காட்டிய 'இரக்க உருக்கங்களை நாம் கேள்விப்படும்பொழுது நம்முடைய இருதயம் உருகுகின்றது.

**சபைத் தூண்களில் ஒன்று மறைந்தது**

தமது நாயகனோடு, சிவநாயகரின் ஊழியத்தில் ஒத்து உழைத்துவந்த ஸ்ரீமதி சேரா அன்னம்மா என்னும் அம்மையார் 1897-ம் ஆண்டில் தீராத நோய்வாய்ப் பட்டனர். இது அவவின் புருஷனுக்கும் கிறிஸ்துவின் பிள்ளைகட்கும் ஆற்றொணாக் கவலைக்கிடனுபது. கனம் கோஸ்லி ஐயரவர்கள் இவவின் கவலைக்கிடனான நிலைபரத்தை யறிந்து இங்கு வந்துசேர்ந்தனர். இவ் ஐயரும் கனம் பெக்காஸ் போதகரவர்களும் செய்த அரும் பிரயாசங்களால் கொடுக்கப்பட்ட மேலான மருந்துகள் எல்லாவற்றையும் கடந்து நோய் மேற்பட்டது. மரணப்படுக்கையிலும் தன் புருஷனுக்கும் மக்கட்கும் சகோதரங்கட்கும் "எனக்காக அழாமல் உங்களுக்காக அழுங்கள்" என்று தேறுதல்கூறி நன்னம்பிக்கையுடன் மரணத்தை மகிழ்வொடு வரவேற்று, தமது ஆறு சிறுபிள்ளைகளையும் தமது நாயகனிடம் ஒப்படைத்து 1899-ம் ஆண்டு பங்குனிமாசம் மரண யோர்தான் நதியைக் கடந்து தமது சிவநாயகரின் திருவடி நிழலடைந்தனர். கிறிஸ்துவை சிவனாகஉடைய அவருடைய மக்களுக்கு மரணம் ஆதாயப்பொருளாகவும் சந்தோஷமாகவும் இருக்குமென்று பரி. பவுல் கூறியமை எவ்வளவு உண்மையான சத்தியம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் தமது ஆறு சிறுபிள்ளைகளின் பொறுப்பாலும் குடும்பபாரத்தாலும் நொந்தவராகி இவ்வுபதேசியார் தமது மனைவியின் சகோதரியை புநர்விவாகமாக மணந்தனர். அப்பால் தமது ஊழியத்தினின்றும் இளைப்பாறினர். உத்தியோகத்தை விட்டும் சுவிசேஷஊழியத்தை கைவிடாது ஊக்கமாக நடத்திவந்தனர். இவ்வூழியத்தோடு உடுத்துறைச்சபைக்கொரு ஆலயம்வேண்டுமென்று எங்குங்கூறி அதற்கெனப் பணஞ்சேர்க்க அரும் பாடுபட்டு வந்தனர். இக்காலத்தில் அதாவது 1902-ம்ஆண்டு மாசிமாதத்தில் நமக்கு மிகவும் அருமையான கனம் கோஸ்லி ஐயரவர்கள் இங்கிலாந்து சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6. கனன் ஐயர்காலம்

1902-ம்ஆண்டு ஆவணிமாசத்தில் கனம் W. J. கனன் ஐயர் அவர்கள், கனம் கோஸ்லி ஐயரவர்களின் இடத்தில் தலைமை மிஷனரியாக வந்துசேர்ந்தனர். இவர் மாத்திரமல்ல இவரது மனைவியாரும் சுவிசேஷவேலையில் அதிகம் கரிசனையெடுத்து வந்தனர் என்பது அவ்அம்மையார் நல்லூர் விடுதிப் பெண்பாடசாலைக்குப் பொறுப்பாக இருந்து நடத்தியமையாலும் பிற குறிப்புகளாலும் அறியக்கிடக்கின்றது. இவ் ஐயரவர்கள் நமது கிராமத்தில் மாத்திரமல்ல, 1907-ம் ஆண்டளவில் கனியூற்று (முல்லைத்தீவு) முதலிய காடடர்ந்த வன்னிப்பிரதேசங்கட்கும் சென்று அநுகூலமான ஊழியஞ் செய்துவந்தனர். அங்கே 1913-ம் ஆண்டில் கட்டிமுடிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்துக்கு இவ் ஐயரவர்களே அத்திவாரக்கல் இட்டனர். இவர் நமது சபையிலும் கிராமத்திலும் மிகவும் அன்புகூர்ந்தனர். பலவருடங்களின் முன் கனம் சிமன்ஸ் ஐயரவர்கள் நமது கிராமத்தில் பட்ட பாடுகளைக் குறைவின்றி இவரும் பட்டார். கடற்கரையோரமாக அனேகம்முறை தமது எசமானுக்காக ஆட்களைப் பிடிக்கும்படி நடந்துதிரிந்தார். நம்மால் மறக்கமுடியாத அருமையான அநுகூலமான ஊழியஞ்செய்தார். சபையும் வளர்ந்து பெருகிற்று. இக்காலத்தில் கனம் சின்னத்தம்பி உபதேசிகர் அவர்களின் இடத்தில் கனம் S. இளையதம்பி உபதேசிகரவர்கள் நியமிக்கப்பட்டனர். பின்னர் 1903-ம் ஆண்டு இவர் நல்லூர் விடுதிப் பெண்பாடசாலைத் தலைமைஆசிரியராக மாறிச் சென்றனர். இவ்வருடத்தில் நமது சபைவளர்ச்சிக்கும் கல்வி வளர்ச்சிக்கும் காரணமாகஇருந்து நமது பச்சிலைப்பளிப் பகுதியில் தமது சுகத்தையும் சொகுசையும் இழந்து 35 வருடங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக தளராஊழியஞ்செய்து நமது அன்பையெல்லாம் கவர்ந்த கனம் பெக்காஸ் போதகரவர்கள் இடம்மாறி தம்பதி சென்றனர். கிறிஸ்துசுவாமிக்குள்ளாக இப்பெருந்தகையா ள்ர்க்கு நாம் எவ்வளவோ நன்றியும் கடமையும் உள்ளவர்களாக இருக்கிறோம். இவர் ஆசிரியராகஇருந்து உபதேசிகராக இருந்து பின் போதகராகிப் பல அநுபவம்படைத்த பெரியார். இவர் 1913-ம் ஆண்டு ஆடிமாசம் 15-ந்தேதி தமது 50-ம்வருட யூபிலிவிழாக் கொண்டாடியபொழுது அக்கூட்டத்துக்கு (Sir William Twynam) கனம் துவைனம் துரையவர்கள் தலைமைவகித்தனர். கொழும்பு பிஷப் அவர்கள் சமுகமளித்தனர். 82 போதகர்மார் வந்திருந்தனர். இத்தகைய கல்ஊழியனும் நமது சபைப் பிதாவுமாகிய இவர் நமது சபையைவிட்டுப் பிரிந்தமை சபைக்குப் பாரியநட்டமே எனினும் இவரது இடத்தில் இவர் மாறிச்சென்ற 1903-ம் ஆண்டிலேயே நமது சபைப்போதகராக கனம் S. மோஷ் போதகரவர்கள் வந்து சபைக்குறுதுணையாக அமர்ந்து ஊழியஞ்செய்துவந்தனர். கிறிஸ்துசுவாமியின் நாமம் இப் போதகர் அவர்களின் முயற்சியாலும் கனம் கனன் ஐயரவர்களின் அரிய பாடுகளினாலும் நமது சபையில் மகிமைப் பட்டுக்கொண்டு வரும்பொழுது இரண்டு துக்ககரமான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஒன்று, தமது 40 வருடசேவைக்குப் பின் அதாவது 1909-ம் ஆண்டு புரட்டாசி மாசம் 8-ந்தேதி நமது சபைக்கு அன்பான மேய்ப்பனாக இருந்த கனம் மோஷ் போதகரவர்கள் இவ்வுலகவாழ்வு நீத்து இயேசுபதமடைந்தனர். இரண்டாவதாக, அநேகவருடங்களாக இச்சபைக்காக அரும்பாடுபட்டவரும், நமதுசபை வளர்வதற்கு காரணமாக இருந்தவரும் தேவனால் புகழப்படத்தக்கவரும் ஆகிய கனம் D. S. சின்னத்தம்பி உபதேசிகரவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனம் D. S. சின்னத்தம்பி உபதேசிகர் அவர்களின் மறைவு**

1914-ம் ஆண்டு கார்த்திகை மாசத்தில் நம்மைவிட்டு மறைந்து மறுமைக்குச் சென்றனர். இந்நிகழ்ச்சியை நமதுசபை மறக்க முடியாது. நமது சபையின் தந்தையும் இவர்; தாயும் இவர். ஆலயக்கட்டுக்கு அரும்பாடுபட்டவர். இக்காலங்களில் ஆலயம் கட்டி முடிந்தபொழுதும் நமதுசபையில் மகிமைக்கேதுவான நன்மையான காரியங்கள் நடந்தேறும்பொழுதும், சபையாரில் பக்தியுணர்ச்சுவாலை பற்றியெரியும்பொழுதும், இவர் பரலோகத்தின் சேனைகளுடன் சேர்ந்து இன்றும் நம்மைப்பார்த்து மகிழ்வடைகின்றார் என்று கர்த்தருக்குள் விசுவாசிக்கின்றோம்.

**கனம் D. P. மூத்ததம்பி உபதேசிகர் அவர்கள்**

1903-ம் ஆண்டு தொடக்கி 1908-ம் ஆண்டுவரையும் உடுத்துறைப்பாடசாலை உபாத்தியாயராகவும் சுவிசேஷகராகவும் இருந்து செவ்வனே கடமையாற்றிய கனம் D. P. மூத்ததம்பி அவர்கள் 1908-ம் ஆண்டு நமது சபையுபதேசிகராக நியமிக்கப்பட்டனர். இவரிடம் கல்விகற்ற அனேகர் இவரது பாடசாலை வேலைஒழுங்கையும் நேர்மையையும் கூறக்கேட்டிருக்கின்றோம். ஆகமலாபம் நிறைந்த கல்விப்புகட்டும் வரமும் இவருக்குண்டு. கிராமங்கிராமமாக கிறிஸ்துவின் ஒளியை பரப்புவதில் முயற்சியெடுத்துவந்தனர். இவ் உபதேசிகரவர்கள் இம்மகிமையான ஊழியம் செய்வதற்கு உதவியாகவும் காரணமாகவும் கனம் சின்னத்தம்பி உபதேசிகரவர்களின் பாரியாரின் தங்கையாரும் சுகுணசுபாவலட்சணம் நிறைந்தவளுமாகிய மேரி செல்லமுத்து என்னும் அம்மையார், பத்தினியாராக வந்து வாய்த்தனர். மனைவியார் தேவஊழியத்துக்கு உதவியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனம் J. A. R. நவரத்தினம்
பாதிரியாரவர்கள்
(34-ம் பக்கம்)



கனம் D. P. மூத்ததம்பி
உபதேசியாரவர்கள்
(24-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரணமுமாய் இருந்தா என்றேன். ஏனெனில் யாழ்ப்பாணச் சபைகளில் பலஇடங்களில் மனைவிமாரின் தொந்தரவால் ஊழியர்களின் தேவஊழியம் தடைப்படுவதும் மனைவிமாரின் சகாயத்தினால் ஊழியர்களின் தேவஊழியம் மகிமைப்படுவதும் கண்ணாரக் கண்டேன் பலமுறை.

இவ்வுபதேசியாரின் தேவஊழியத்துக்குப் பெருந்துணையாக இருந்த இவ் அம்மையார் நல்லூரில் கல்வி கற்றுத் தேறினவ. கல்வியும் பக்தியும் விருந்தோம்பும் இன்முக சுபாவமும் பொருந்திய இவை தமது நாயகனின் தேவஊழியத்துக்கு துணைசெய்ததை வியப்பன்று. 1912-ம் ஆண்டில் இவ் உபதேசியாரவர்கள் வேதத்தை இன்னும் ஆழமாகவும் விரிவாகவும் படித்துத் தேறுவதற்காக இந்தியாவுக்குச்சென்று பரிசுத்தாவியின் அபிஷேகம்பெற்ற வேதபண்டிதராகிய கனம் உவாக்கர் ஐயர் முதலானவர்களிடம் வேதபோதனையும் சுவிசேஷ சாதனையும் பெற்றுத் திரும்பினர்.

R. 21880.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. பிற்காலம்

இந்தியாவிலிருந்து திரும்பிவந்த இவ் உபதேசியாரவர்கள் தேவஊழியத்தைத் தாம் விட்ட இடத்திலிருந்து திரும்பச் செய்துகொண்டுவந்தனர். இவரது காலத்தில் எமதுசபைக்கு விசேடதுணையாக இருந்த இரு தேவஊழியர்களை நாம் இவ்விடத்தில் குறிப்பிடுவது இன்றியமையாதது. முதலாவதாக கனம் மோஷ் போதகர் அவர்களின் இடத்துக்கு 1910-ம் ஆண்டு நமது சபைஊழியனாகவும் போதகராகவும் வந்த கனம் S. C. டானியேல் போதகரவர்களைக் குறிப்பிடவேண்டும்.

**கனம் S. C. டானியேல் போதகரவர்கள்**

இவர் நல்லூழியம் நமக்குச் செய்தார். இவர் நமதுசபையில் மிகவும் அன்புள்ளவர். "உடுத்துறைச்சபை ஒரு சிறிய கொலோசே சபை" என்று இவர் பலமுறை கூறுவதுண்டு. இது நம்துசபையில் இவருக்குள்ள அன்பையும் மதிப்பையும் காட்டுகின்றது. இவர் பின்வாங்கிச் செல்வோரைத் தேடித்தேடிச் சந்திப்பதில் சலியாதவர். இவ்விடயமாக ஒரு சைவருடைய வீட்டுக்கு இவர் ஒருமுறை போனபொழுது பாலுடன் நஞ்சுகலந்து கொடுக்கப்பட்டதென்றும் இவர் தெரியாமல் அதைப் பருகினரென்றும் தெய்வாதீனமாக உயிர்தப்பிப் பிழைத்தனர் என்றும் கேள்விப்படுகின்றோம். நமது ஆலயக்கட்டுக்கு இவர்காலத்தில் சுமார் 1300 ரூபா அளவில் சேர்க்கப்பட்டது. நமது சபைஊழியத்தை ஆரம்பித்த நமது ஆதிப் பிதாவாகிய கனம் யோர்ஜ் டானியேல் அவர்களது புத்திரர் இவர். இவ்வருமையான ஊழியம்செய்த இப்பெரியார் 1916-ம்ஆண்டில் வேற்றிடம் மாறிச்சென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனம் S. இரத்தினாதிக்கம் போதகரவர்கள்**

இரண்டாவதாக 1916-ம் ஆண்டில் கனம் டானியேல் போதகர் அவர்களின் இடத்தில் நியமிக்கப்பட்டு நமது சபையின் நல்லமேய்ப்பனாக வந்த கனம் S. இரத்தினாதிக்கம் போதகரவர்களை நமதுசபை ஒருபோதும் மறக்க முடியாது. சாந்தமும் தயவும் அமைதியான வார்த்தையும் இவரது பிறப்புச்சுபாவம். எத்தகைய கோபசுபாவமுள்ளவர்களையும் தம்மீது சீறிப்பாய்பவர்களையும் தமது தாழ்மையான அமைதியான வார்த்தைகளால் அடக்கும் கெட்டித்தனமும் புன்முறுவல் கனிந்து மலர்ந்த முகமும் சாந்தமான பார்வையும் உடையவர் இவர். கிறிஸ்துவை இவரில் நாம் கண்டோம்; பேச்சில் மாத்திரமல்ல, சீவியத்திலும். இவர் நமது ஆலயங் கட்டப்படவேண்டுமென அருமுயற்சி எடுத்தோருள் தலைசிறந்தவராவர். நம்மில் இவர் வைத்த பேரன்பை மறவோம். எனினும், இவரைத் தெய்வம் தமது சித்தப்படியே 1936-ம்ஆண்டில் தமதுமடிக்கு அழைத்தருளினார். இவரது ஆத்துமா சாந்தியடைவதாக.

இங்ஙனமாக, இத்தகைய உத்தம போதகர்கள் இருவருடனும் இவ் உபதேசியாரவர்கள் கிறிஸ்துவின் அன்பை மனம் வாக்கு காயங்களால் வெளிப்படுத்தி அஞ்ஞான மாயையில் இருந்த எத்தனையோ ஆத்துமாக்களை அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளியினிடத்து ஆண்டவர் அருளால் அழைத்துச்சென்றனர்.

வீரகத்தி சத்தியநாதன், அருளம்மா சின்னப்பிள்ளை என்பவர்களும் டானியேல் வடிவேலு, பேதுரு துரையப்பா, போல்தாமர், சின்னத்தங்கச்சி என்பவர்களும் யேசுதாசன் கணபதிப்பிள்ளை, யேசுதாசன் முருகேசு, என்பவர்களும் யோன் கணபதிப்பிள்ளை என்பவரும் கிறிஸ்துவை அறியவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரைத் தம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளவும் இவ ரையே சுவாமி பாவித்தருளினர். அன்றியும் டானியேல் முத்துச்சாமி, அழகம் என்பவர்களும் செல்லமுத்து, பொன் னம்மா என்பவர்களும் கிறிஸ்துவின் மந்தைக்குரிய ஆடுகள் ஆகவும் இவரே துணைக்காரணமாயினர். இப்படியின் மூவருள் ஒருவர் கிறிஸ்துவை மறுதலித்துப் பின்வாங்கினர். சிலர் மறுமைக்குட்சென்றனர். ஏனையோர் உத்தமமார்க்கத்தின் உயிர்பெற்று வாழ்கின்றனர்.

அன்றியும் கிறிஸ்துவையும், சத்தியமார்க்கத்தையும், கிறிஸ்துவின் வசனங்களையும், கிறிஸ்துவின் ஊழியர்களையும் பகிரங்கமாகப் பகைத்து 'முள்ளில் உதைத்துக்கொண்டு' திரிந்த க. பேதுரு முத்தையா என்பவரும் "அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவ ருடைய நாமமேயல்லாமல் வேறொருநாமம் கட்டளையிடப்பட வுமில்லை" (அப். 4 : 12) என்று ஆவியானவர் பேதுருவின் வாயினாற்கூறிய கிறிஸ்துமார்க்க மூலாதார சத்தியத்தை மன தார ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவை இரட்சகனாகவும் தெய்வ மாகவும் தொழுதுகொள்ள இவ் உபதேசியாரவர்கள் பல முறை அரும்பாடுபட்டனர்.

மேலும் குணநாயகம், வடிவேலு, துரையப்பா, முத்துத் தம்பி போல், யோன் கணபதிப்பிள்ளை, யேசுதாசன் என்னும் ஆண்பிள்ளைகளும், ருத், பாக்கியம், சின்னத்தங்கம் என்னும் பெண்பிள்ளைகளும் கோப்பாய் கல்லூரி என்னும் இடங்கட்குச் சென்று கல்விகற்றுத் திரும்ப இவ் உபதேசியாரவர்கள் செய்த உதவிகளும் பட்ட பிரயாசங்களும் அளப்பில. இவ்வாறு அனேக பிள்ளைகளின் கல்விக்கும் ஆத்தும இரட்சிப்புக் காகவும் அனேகருடைய உத்தியோகங்கட்கும் சபைவளர்ச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிக்கும் விதாகரமாக ஆண்டவரால் பாவிக்கப்பட்ட இவர் 1928-ம் ஆண்டில் உபதேசியார் உத்தியோகத்தினின்றும் இளைப்பாறினர். உத்தியோகத்தினின்றும் இளைப்பாறினரேயன்றி தேவஊழியத்தினின்றும் இளைப்பாறாதவராகி இன்றுவரையும் எவ்வித வேதனமுமின்றி அதிக பிரயாசையுடனும் விடாப்பிடியாகவும், முன்மாதிரியுடனும் தம்மை ஆட்கொண்ட நாதனுக்கென்று அன்பின்ஊழியம் செய்துகொண்டு வருகின்கின்றார். இச்செய்கை கர்த்தரின் பார்வைக்கு அருமையும் நமக்கு முன்மாதிரியுமே.

இச்சபைக்கொரு ஆலயம் இல்லையே என்று காலத்துக்குக்காலம் கிறிஸ்துவின் பிள்ளைகள் பலர் முயற்சி எடுத்து வந்தனர். எனினும் தெய்வம் நமது ஆலயம் கட்டிமுடிக்கப்படற்கு கருவியாக இவரையே தெரிந்துகொண்டார்; ஆதியில் எருசலேம் தேவாலயம் கட்டிமுடிக்க சாலொமோன் ஞானியைத் தெரிந்துகொண்டதுபோல. இவர் தமது தேகசுகத்தையும் நேரத்தையும் தியாகஞ்செய்து இவ்வாலயக் கட்டுக்காக யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பலபாகங்களிலும் ஜெபத்தோடும் பிரயாசத்தோடும் அரும்பாடுபட்டு உழைத்தனர். தெய்வ ஏவுதலால் நமது சபையின் அங்கத்தவர்களும் பிறஇடங்களிலே உத்தியோகமாக இருக்கும் நமது சபையின் பிள்ளைகளும் நமது சபையில் அனுதாபமுள்ள மற்றநேக தேவபிள்ளைகளும் உற்சாகமாகப் பொருளுதவிசெய்தனர். நமது ஆலயத்தை நாம் பார்க்கும்பொழுதும் நினைக்கும்பொழுதும் இவ் உபதேசியாரவர்களையும்சேர்த்து நினைக்கும்படியாக இவர் இவ்வாலயக்கட்டுக்காக பலநிந்தைகள் எதிர்ப்புகட்கூடாக தம் முழுப் பெலத்தாலும் அரியசேவை செய்தனர்.

நமது திருச்சபைக்கு நாயகராகிய கிறிஸ்துசுவாமி நமக்குத் தந்த ஈவுகளுள் பெரிய ஈவு 1933-ம் ஆண்டில் நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்கென்று நியமிக்கப்பட்ட கனம் J. A. R. நவரத்தினம் பாதிரியாரவர்கள். இவர் நமது சபையிலும் சபை அங்கத்தவர்களிலும் அன்புகூரும் மாதிரி கிறிஸ்துசுவாமியின் அன்பைப்போலவே. இவர் இவ்வன்பால் நெருக்கி ஏவப்பட்டபடியால் இவ் உபதேசியாரவர்களுக்கு துணையாகஇருந்து ஆலயக்கட்டுக்காக செயவேண்டுதலும் பொருள்உதவியும் ஏனையனேக அரிய முயற்சியும் செய்துவந்தனர். மகா கனம் கொழும்பு பிஷப் அவர்களும் நமது இரு ஆர்ச் டீக்கன்மார் அவர்களும் இவ் ஆலயக்கட்டு விஷயத்தில் மிகுந்த கரிசனை எடுக்கும்படி இவர் செய்தார். உடுத்துறைப்பாடசாலைத் தலைமையாசிரியராகப் பலவருடங்களாக இருந்து காலஞ்சென்ற கனம் வ. தா. பொன்னையா ஆசிரியரவர்கள் இவ் ஆலயத்துக்காகப் பொருளுதவியோடு தமது சரீரசுகத்தையும் தியாகஞ்செய்து அரும்பாடுபட்டுச் சேவைசெய்தனர். இவர் தம் பொருளை ஆலயத்துக்குக் கொடுக்கிலும்பார்க்க அனேக தருணங்களில் களைப்பிலும் கஷ்டத்திலும் அகப்பட்டு, தமது தேகத்தையும் நேரத்தையும் செலவழித்து இவ்வாலயக் கட்டுக்காக அரும்பாடுபட்டதை நாம் பன்முறை கண்டிருக்கின்றோம். ஆண்டவரிடமிருந்து இவர் தமது பிரயாசத்துக்கு பிரதிபலன் பெறுவாராக. அன்றியும் பாடசாலை விஷயங்களிலும் சபைவிஷயங்களிலும் தன்னை ஆண்டவருக்கென்று பானபலியாகவார்த்து நல்லூழியஞ்செய்வது இவரது சிறப்புச்சுபாவம். 1933-ம் ஆண்டு எரிந்தழிந்த உடுத்துறைப் பாடசாலையை இப்போது விளங்குவதுபோல பலர் உதவியுடன் கன்னிலையில்கட்ட அரும்பாடுபட்டு கட்டிமுடித்தவரும் இவரேயாவர். இக்கிராமத்துக்கும் பிறஇடங்கட்கும் அன்பனுகவும் நமதுசபைக்கொரு தூணுகவும் இருந்த இவர் தமது இளவயதில் 1937-ம்ஆண்டு ஆடி மாதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15-ந்தேதி தளர்பாத தெய்வபக்தியுடன் ஆண்டவருடைய மார்பண்டை சென்றனர். இவர் இவ் ஆலயங்கட்டி முடிவதையும் இதற்குச் சென்று தொழுதுகொள்ளுதலையும் காண வாஞ்சையாயிருந்தனரெனினும் கர்த்தருடைய சித்தம் வேறு விதமாக நிறைவேறிற்று. இவரது ஆத்மா சாந்தியடைவதாக.

**ஆலயத்தின் மூலைக்கல்லு**

இவ்வுபாத்தியாயரவர்களும் இவ் உபதேசியாரவர்களும் அநேக தேவபிள்ளைகளும் உள்ளுணர்வோடு செப்த செபம் வேண்டுதலினாலும் பொருளுதவியினாலும் 1939-ம் ஆண்டு ஆடிமாசம் 24-ந் தேதி நமதுசபைத் தேவாலயத்துக்கு கர்த்தராகிய கிறிஸ்துசுவாமியே மூலைக்கல்லாகவும் அவர் சிந்திய இரத்தமென்னவே அத்திமூலைக்கல்லு வாராமாகவும் இருக்கும்படி சங்கை. கனம் F. L. பெவன் பாதிரியாராகிய கொழும்பு ஆர்ச் டீக்கன் அவர்கள் மணமுவந்து யாழ்ப்பாணச்சபையின் பல போதகர்கள் முன்னிலையில் அத்திவாரமிட்டார்கள்.

**ஒரு நல்லமாதாவின் பிரிவு**

இவ்வருடத்திலேயே சபைவிருத்திக்காகவும் தெய்வநாம மகிமைக்காகவும் மிகத்துணையாக இருந்த மேரி செல்லமுத்து அம்மையார் தீராப்பிணிவாய்ப்பட்டு 1933-ம் ஆண்டு வைகாசி மாதம் 30-ந் திகதியிலன்று தமது நாயகனையும் தமது எழுமக்களையும் நம்மெல்லாரையும்பிரிந்து தமது 62-ம்வயதில் பரதீசு சென்றமை நமதுசபைக்கு வந்த நட்டங்களுள் பெரிது எனலாம். இவ பல சுகுணம்நிறைந்த அம்மையார். கிறிஸ்தவர்களையும் கிறிஸ்த ஊழியர்களையும் இவ உபசரிக்குமுறையும் அன்புகாட்டும் நெறியும் ஒருவராலும் மறக்கமுடியாத ஒரு தாதனமான லட்சணம். இத் தாங்கொணாப் பிரிவால் உபதேசியாரவர்கள் பெரிதும் திகைத்தனர். எனினும் தைரியத்தை விடாமல் ஆலயக் கட்டுக்காக உற்சாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாய் பொருள் சேர்க்க மறுபடியும் இவர் முயற்சி எடுத்தனர். இவரது அரும்பிரயாசமான தியாகமுயற்சிகட்காக இவரையும் இவ் ஆலயம் உருவாகி எழும்புவதற்கு சரீர அர்த்த பொருள் உதவிகள் செய்த யாவரையும் கர்த்தர் நினைத்தருளுவாராக என்று நாம் வேண்டுதல் செய்கின்றோம்.

**முதலாவது திடப்படுத்தல் ஆராதனையும் அத்தியட்சர் விஜயமும்**

1934-ம் ஆண்டு ஆவணிமாசம் 2-ந் திகதி மாலை 4.30 மணிக்கு முதன்முதலாக நமது சபையில் ஆண்களும் பெண்களுமாய் 8 பேர் திடப்படுத்தல் பெற்றனர். அக்காலத்தில் கொழும்பு அத்தியட்சராக இருந்த மகாகனம் மார்க் கார்ப்பென்ரர் காணிபர் அவர்கள் நமதுசபையைத் தரிசித்து இத்திடப்படுத்தல் வைபவத்தை நடத்தும் சிலாக்கியம் நமக்குக் கிடைத்தது. ஆலயம் இன்னும் கட்டி முடியாமையால் வழமைபோல் உடுத்துறைப் பாடசாலை மண்டபத்திலேயே இத்திடப்படுத்தல் ஆராதனை மகா கனம் அத்தியட்சரவர்கள் நடத்தினார்கள்.

**கனம் K. P. சத்தியநேசன் உபதேசியார் அவர்கள்**

1936-ம் ஆண்டு கார்த்திகைமாசம் 19-ம் திகதி நமது சபை உபதேசியாராக கனம் K. P. சத்தியநேசன் அவர்கள் நியமிக்கப்பட்டு 1940-ம் ஆண்டுவரையும் சுமார் நான்குவருடங்களாக ஊழியஞ்செய்து வந்தனர். இவர் வந்து சிலகாலங்கட்குள்ளாகவே லில்லி மகேஸ்வரி என்னும் பிள்ளை கிறிஸ்துவின் மந்தைக்குட் சேர்க்கப்பட்டா. ஞாயிற்றுக்கிழமைக்கூட்டங்களையன்றி புதன் கிழமைகளில் வீட்டுக்கூட்டங்களும் ஆலயத்தில் வேதப் படிப்புக்கூட்டங்களும் இவர் நடத்திச் சபைக்கு நல்லூழியஞ் செய்துவந்து யாழ்ப்பாணக் கிறிஸ்த மிஷனெரிச்சங்க (J. C. M. A.) ஊழியனாக கிளிநொச்சி என்ற கிராமத்துக்கு மாறிச் சென்று அங்கு மகிமையானஊழியம் செய்துவருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நமது ஆலய பலிபீடம்



நமது ஆலயப் பிரதிஷ்டையிலன்று
அத்தியட்சாவர்களும், குருமாரும், சபையாரும்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
சென்ற பவனிக்காட்சி.

நமது சபைச்சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் நூறுமுறை பொறிக்கப்படவேண்டிய வருடம் 1938-ம் ஆண்டு. ஏனெனில், நமது ஆலயம் கட்டி முடிக்கப்பட்டு கர்த்தருடைய பலிபீடமாகப் பிரதிஷ்டை பண்ணப்பட்ட ஆண்டு இவ்வருடமே. இவ்வாண்டு பங்குனிமாசம் 29-ம், 30-ம் தேதிகளில் கொழும்பு அத்தியட்சரவர்கள் நமதுசபைக்கு மறுபடியும் விஜயஞ்செய்து யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலுமிருந்துவந்த போதகர்மாரும் சபையங்கத்தவர்களுமான சுமார் 150 பேர் முன்னிலையில் பரிசுத்த மகதலேனா மரியாளின் திருநாளின் ஞாபகார்த்தமாக அப்பெயரோடு நமது ஆலயத்தைக் கடவுளுக்கென்று பிரதிஷ்டை பண்ணினார்கள். அன்றே 9 பேர் திடப்படுத்தல் பெற்றனர். இவ்விதமாக, அத்திவாரமிடப்பட்டு ஐந்துவருடங்களின்பின் சுமார் 6000 ரூபா செலவுடன் நமக்கொரு அழகான சிறியஆலயம் கிடைத்தது. இச்சிலாக்கியங்கள்

**கனம் C. T. வில்லியம்ஸ் போதகர் அவர்கள்**

மாத்திரமல்ல, 1927-ம் ஆண்டு கார்த்திகை மாசம் தொடங்கி 1930-ம் ஆண்டுவரையும் நமது சபையின் மேய்ப்பனாக கனம் C. T. வில்லியம்ஸ் அவர்கள் நல்லூழியஞ்செய்தார். இக்காலத்தில் நம்சபை அதிகம் முன்னேற்றமடைந்தது குறிப்பிடத்தக்கது.

ஆத்துமாவை கட்டப்படுத்தி அந்தகாரத்திலிருந்து பாதைதெரியாது தடவித்திரிந்து கஷ்டப்பட்ட நாம் சுவாமியின் கிருபையால் அவருடைய ஆச்சரியமான வெளிச்சத்தில் நடக்கக் கிருபைபெற்றோம். அவரது பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகி நித்தியசந்தோஷத்தை அனுபவிக்கும் உன்னத சிலாக்கியத்தையும் இலவசமாய்ப் பெற்றோம். அவரது மணவாட்டியாகிய திருச்சபையின் அங்கங்களுமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கப்பட்டோம். அவரைத் தொழுதுகொள்ளும்படி அவருடைய கிருபையால் ஒரு சிறிய அழகான ஆலயத்தையும் பெற்றோம். அன்றியும் பிரயாணக் கஷ்டத்தாலும் பிற கஷ்டங்களாலும் இடையிடை கர்த்தருடைய திருவிருந்தை அனுபவித்தோம் இப்போது மாசமொருமுறை கர்த்தருடைய பந்தியில் சேரும் சிலாக்கியத்தையும் பெற்றோம். இவ் ஒழுங்குக்குக் காரணம் நமது சபைப் போதகராக இருக்கும் கனம் J. A. R. நவரத்தினம் பாதிரியார் அவர்களேயாம்.

**கனம் J. A. R. நவரத்தினம் பாதிரியார் அவர்கள்**

இவர் நமது சபையில் கொண்டிருக்கும் அன்பானது ஆச்சரியமானதும் பேரன்பானதுமாயிருக்கின்றது. இவர் கடந்த ஏழுவருடங்களாக நமக்கு இயேசுசுவாமியால் கொடுக்கப்பட்ட நல்ல மேய்ப்பனாக இருந்துவருகின்றார். நமது துக்கங்களைத் தமது துக்கங்களாகவும் நமது சந்தோஷங்களைத் தமது சந்தோஷங்களாகவும் ஏற்றுக் கொண்டு நமது சபையிலும் நம்மிலும் நமது கிராமத்திலும் உன்னதமான அன்புகூர்ந்து நமது சபைவளர்ச்சிக்காக தன்னயமற்றஅரியசேவை செய்துகொண்டு வருகின்றனர். நமது சபையில் பிரயோசனமற்ற ஆட்களின் பேர்த் தொகையை விரும்பாமல் நம்மில் நூதன அனற்சுவாலையையும் ஆவியின் புதுப்பெலனையும் பரிசுத்த அன்பையும் வளர்ப்பதற்காக இவர் கர்த்தருக்குள் படும் பிரயாசங்களை நாம் காண்கிறோம். ஆத்துமவிடாயும் அன்பும் உடையவர். இவர்இன்னும் அனேகவருடங்கள் நமது சபைக் குருவராகவும் நமது ஆண்டவருக்குள்ளான தகப்பனாகவும் இருந்து நம்மை இவ்விபி பாதையில் வழிநடத்தச் சிவநாயகர் திருவுளம் இரங்குவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாகனம் C. D. கோஸ்லி அத்தியட்சரவர்கள்

([illegible])

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராக. 1939-ம் ஆண்டில் கனம் A. E. K. ஹூயிஸ் போதகரவர்களும் நமதுசபைக்கு உதவிக்குருவாக நியமிக்கப்பட்டு நமது சபையில் நல்ஊழியம் செய்துவருகின்றார். இவர் நமக்கு மிகவும் அருமையானவரும் பின்னே கூறப்படுபவருமாகிய கனம் J. சுப்பிரமணியம் ஹூயிஸ் அவர்களின் புதல்வருமானார்.

**கனம் A. E. K. ஹூயிஸ்போதகர் அவர்கள்**

1939-ம் ஆண்டு ஆடிமாசம் 27-ந்திகதியன்று கொழும்பு அத்தியட்சர் மகாகனம் C. D. கோஸ்பே அவர்கள் நமதுசபைக்கு விஜயஞ்செய்து 3 பேருக்குத் திடப்படுத்தல் ஆராதனை நடத்திச் சென்றார்கள்.

**அத்தியட்சர் வருகை**

அப்பால் 1940-ம் ஆண்டு பங்குனிமாசம் 8-ம் திகதி வடபகுதி ஆர்ச் டீக்கன் அவர்கள் நம்மிடம்வந்து மார்க்க அனுபவத்தில் நம்மை தைரியமூட்டிச் சென்றார்கள்.

இந்தியாவில் 30 வருடங்களுக்குமேல் ஊழியஞ்செய்து இளைப்பாறி யாழ்ப்பாணம்வந்து ஆண்டவருடைய ஊழியத்தில் இளைப்பாறுதலவராகி அன்பின் ஊழியம் செய்துகொண்டிருக்கின்ற கனம் J. சுப்பிரமணியம் ஹூயிஸ் ஐயா அவர்கள் இடையிடை வந்து நமது சபையாரையும் கடற்கரையோரங்களிலுள்ள சைவச்சகோதரர்களையும் சந்தித்து சுவிசேஷ வேலை செய்துவருகிறார். ஆத்துமாக்களில் உண்டான தாகத்தினால் தன்னைமறந்து நம்மோடுசேர்ந்து பழகும் சுபாவமுடையவர். மற்றவர்களைப்போல அழகான பிரசங்கத்தோடு நில்லாமல் கவர்ச்சிக்குரிய சீவியமுமுடையவர். இவரதுவருகை நமக்குப் புதுப்பெலனைத் தருகிறது; மகிழ்ச்சியைத்தருகிறது. கூழுக்கும்பாடி மீசைக்கும் பாடுகின்ற நம்முடைய இரட்டைச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவியமான வெதுவெதுப்பான நிலையை நமக்கு உணர்த்துகின்றது. இப்படியாக பல பரிசுத்தபிள்ளைகளை நமக்குக் காலத்துக்குக்காலம் தந்துவருகிற தெய்வத்துக்கே ஸ்தோத்திரம். எல்லா மகிமையும் கனமும் துதியும் வல்லமையும் அவருக்கே உரியன.

**நம்மில் அனுதாபமுடையோர்**

அன்றியும், கிறிஸ்துசேவா ஆச்சிரமப் பெரியண்ணன் அவர்களும் கோப்பாய் விடுதிப்பெண்பாடசாலைத் தலைவி அம்மா அவர்களும் நல்லூர், கோப்பாய், சண்டிக்குளி முதலிய இடங்களிலுள்ள சில தெய்வமக்களும் இடையிடை இங்குவந்து நம்மோடு தங்கி அன்னியோன்னியக் கூட்டங்கள் நடத்தி நம்மை மார்க்கபக்தியில் வளர்த்துச்செல்வது வழக்கம்.

“நான் உங்களை ஊரில் ஒருவனும் வம்சத்தில் இரண்டு பேருமாகத் தெரிந்து உங்களைச் சீயோனுக்கு அழைத்துக் கொண்டுவந்து உங்களுக்கு என் இருதயத்துக்கேற்ற மேய்ப்பர்களைக் கொடுப்பேன். அவர்கள் உங்களை அறிவோடும் புத்தியோடும் மேய்ப்பார்கள்” (எரே. 3: 14, 15) என்று வாக்குத்தத்தஞ்செய்த சர்வலோக சிருஷ்டிகர்த்தா அவ்வாறாக நம்மை கடற்கரையோரங்களிலும் காட்டுப்பக்கங்களிலும் ஒன்றிரண்டாகப் பொறுக்கியெடுத்து நம்மை அலங்கரித்து மனுஷர்களாக்கி பிள்ளைகளாலும் பணத்தாலும் மதிப்பாலும் உத்தியோகங்களினாலும் விசேட உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களாலும் ஏராளமாக நம்மை ஆசீர்வதித்தார். மாத்திரமல்ல, ஆவிப்பிரகாரமாக நம்மை ஆச்சரியமாக ஆசீர்வதித்தார், ஆசீர்வதிக்கிறார். அனேக சபைகட்குக் கிடையாத பிரசங்கத்தில் மாத்திரமல்ல, சீவியத்திலும் நாம் பின்பற்றக் கூடிய நமக்கு அருமையான தெய்வசுபாவமுள்ள ஒரு குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னோவரையும் நமக்கு மேய்ப்பனைக் கடந்த எழுவருடங்களாக நாம் பெற அபாத்திரரேனும், பெற்றனுபவிக்கக் கிடைத்த சலாக்கியமும் அவைகளுள் ஒன்று.

இவ்வாறு நமது சபை கடந்த தொண்ணூறு வருடங்களாக எத்தனையோ தடைகளையும் கஷ்டங்களையும் கடந்து பொது வையாகப் படிப்படியாகக் கட்டப்பட்டிலங்கிறதென்று நாம் எண்ணும்போது திருச்சபாநாயகருக்கு நமது முழு இருதயத்தையும் கைகளையும் உயர்த்தி அஞ்சலிக்காமலிருக்க முடியாது.

“கையயர்ந்து வாய்புலர்ந்து கண்ணிருண்டு காதடைத்து மெய்ய சிலுவைசுமந்தலசி மெய்வருந்தி தூய்ய திருவடிகள் சோர்ந்து நடைதள்ளாடி” சென்று எழுபத்திரண்டு கொடு முள் திருத்தலைப்புச்சுற்றிலும் எதிப்பாய, சிலுவையில் கிடந்து இரத்தமெல்லாம் ஆறாய்ப்பெருக்கோட உழுத படைச் சால் போன்று வாரடியால் பிளவுண்ட திருமுதுகுடன் அரும் பாடுபட்டு நமக்கென்று சம்பாதித்த தமது மணவாட்டியாகிய இத்திருச்சபையை இரட்சாபெருமான் தாமே காவலணைத்து கடைசிமட்டும் கறைப்படாது காத்தருள்வாராக. ஆமென்.

சபையின் புடமிடுகை

அப்போஸ்தலர்காலத்தில் எவ்வாறு சபை துன்புறுத்தல்களடைந்து யூதர்களாலும் புறசாதியார்களாலும் அவர்கள் எவ்வாறு அருவருக்கப்பட்டார்களோ அவ்வாறாக நமது சபையின் கிறிஸ்தவர்களைச் சூழவிருக்கும் நமது சகோதரர்களாகிய சைவ சமயத்தோர் கீழானவர்களாகவும் அருவருக்கப்பட்டவர்களாகவும் எண்ணி தங்களோடு சேர்க்காமல் தள்ளினார்கள். கிறிஸ்தவர்களோடுகூட இருக்குண்பது தோஷமும் தீட்டும் என்றெண்ணினார்கள். இவர்கட்குச் சில வெருக்காதபடி வண்ணார்களைத் தடைசெய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவிதரையும் தடைசெய்தனர். இவ்வாறாக நெருக்கப்பட்டாலும் "கிறிஸ்துவே எல்லாமாயிருக்கிறார்" என்ற தைரியத்தோடு கிறிஸ்துவுக்குள் நம்பிக்கையாயிருந்தனர். இக்காரியங்களெல்லாம் சபையைப் புடமிடுகிற காரியங்களாக அக்காலத்தில் நடந்தேறின. இப்புடமிடுகை இடையிடை தோன்றுவதுண்டு. "இமைப்பொழுது உன்னைக் கைவிட்டேன், ஆனாலும் உருக்கமான இரக்கங்களால் உன்னைச் சேர்த்துக்கொண்டேன்" (ஏச. 54 : 7) என்று திருவாய் மலர்ந்தருளிய பெருமான், "கழுகு தன் கூட்டைக் கலைத்து தன் குஞ்சுகளின்மேல் அசைவாடித் தன் செட்டைகளை விரித்து அவைகளை எடுத்து அவைகளைத் தன் செட்டைகளின்மேல் சுமந்துகொண்டு போகிறதுபோல" (உபா. 32: 11) துன்பத்தில் அமிழ்ந்து வருந்திய தமது பிள்ளைகளை அளவுக்குமிஞ்சி வருந்தக்கண்டு சகிப்பாரோ? கொஞ்சக்காலத்துக்குள்ளேயே சபைக்குண்டான உபத்திரவம் தணியவே துன்புறுத்தினவர்களும் பலர் கிறிஸ்தவர்களாகிச் சபையில் சேர்ந்துகொண்டனர். சபைக்குண்டான இத்துன்பங்கள் நடந்தகாலத்தில் கிறிஸ்துவின்பிள்ளைகள் இளைப்படைந்து சோர்ந்துபோகவுமில்லை, தைரியத்தை இழக்கவுமில்லை. கர்த்தருடைய கிருபைக்காகக் காத்திருந்து பெலன்பெற்றார்கள். "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலனடைந்து கழுகுகளைப்போலச் செட்டைகளையடித்து எழும்புவார்கள். அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்" (ஏசா. 40 : 31) என்பது நித்தியமான சத்தியம்.

நமதுசபையில் இப்பொழுது சுமார் 14 குடும்பங்கள் மாத்திரமுண்டு. பிள்ளைகள் தவிர திருவிருந்தருந்துவோர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 பேருண்டு. எனினும் கர்த்தர் நம்மோடிருக்கிறார் என்கிற நிச்சய அனுபவம் நமக்குண்டு. நமது சபைக்குருவான வராகிய கனம் J. A. R. நவரத்தினம் பாதிரியார் அவர்களும் சபை உதவிக்குருவானவராகிய கனம் A. E. K. ஞாயிஸ் போதகரவர்களும் யாழ்ப்பாணச்சபைகள் நன்கு அறிந்தவரும் ஆண்டவருக்குள் நம்மில் பேரன்பு உடையவரும் நமக்கு மிக உபயோகமான வருமாகிய கனம் J. சுப்பிரமணியம் ஞாயிஸ் ஐயா அவர்களும், கிறிஸ்தசேவா ஆச்சிரமப் பெரியண்ணன் அவர்களும், கோப்பாய் விடுதிப்பெண்பாடசாலைத் தலைவி அம்மா Miss M. V. Hutchins அவர்களும், நல்லூர், கோப்பாய், சுண்டிக்குளிச் சபைகளிலிருக்கும் சில தேவபக்தியும் சுவிசேஷ வாஞ்சையும் உள்ள மக்களும் வருடம் ஒருமுறையேனும் நமது ஏழைச் சிறுசபைக்கு விஜயஞ்செய்து அன்னியோன்னியக் கூட்டமாக இரண்டுமூன்று நாட்களாக நம்மொடு தங்கி கிராமத்தில் சுவிசேஷவூழியஞ்செய்யும் வழக்கமும் அதனால் நமது சபையும் கிராமமும் பெலனும் வெளிச்சமும் அடைவதும் ஆகிய நல்ல அனுபவம் நமக்குண்டு.

(Camps) அன்னியோன்னியகூட்டங்கள்

அன்றியும் வருடாவருடம் ஸ்தோத்திரப்பலி ஆராதனை நடைபெறும்பொழுது ரத்தினபுரி, காலி, கொழும்பு, கந்தப்பளை, கம்பளை, கேகாலை, சிங்கப்பூர், பெல்மதுளை முதலியஇடங்களில் உத்தியோகமாயிருக்கும் நமது சபையின் பிள்ளைகள் பணவுதவியினால் நமது சபை வேலைகளைத் தாங்கிவருகிறார்கள்.

வெளியிலிருக்கும் சபையின் பிள்ளைகளின் உதவி

இக்காலங்களில் நமதுசபையை மிகநேசித்த இரு பெரியார் இவ்வுலகஓட்டத்தைமுடித்துச் சென்றமை இங்கு குறிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கனம் G. S. சுப்பிரமணிய உபதேசியாரவர்களின் பிரிவு**

பிட வேண்டிய தவசியம். அவர்களுள் முதல்வர் கனம் G. S. சுப்பிரமணிய உபதேசியார் அவர்கள். இவர் அகமும் முகமும் அழகு படைத்தவர். அனேகவருஷங்களாக காடும் மேடும் அடர்ந்த இப்பகுதிகளில் சலியாமல் ஆண்டவருக்காக உழைத்தவர். நாமெல்லாரும் நன்கறிந்தவராகிய கிறிஸ்தசேவா ஆச்சிரமத் தலைவராகிய கனம் S. செல்வரத்தினம் போதகர் அவர்கள் இவரது அருமைப் புதல்வராவர். இவர் சீவியகாலமெல்லாம் நமது சபையையும் நன்மையையும் நினைத்து நமக்குத் துணையாக இருந்ததுமாத்திரமல்ல, தமது கடைசி மூச்சுவிடும்பொழுதும் "உடுத்துறைத் தேவாலயத்துக்கு நான் போகவேண்டும்" என்றுசொல்லிச் சீவனைவிட்டார் என்று நாம் கேள்விப்படும் போது நமது இருதயம் உருகுகின்றது. அவரது மாறா அன்பை நினைத்து. அவர் இன்று நம்முடன் இல்லாவிட்டாலும் அவர் நமது ஆலயத்துக்கு ஈந்த இரு தூண்டா மணிவிளக்குகளும், அவர் நமக்கு, பரிசுத்த முன்மாதிரியைத்தந்து பிரகாசித்தது போல அவைகளும் நமது ஆலயத்துக்குள் எரிந்து பிரகாசிக்கின்றன. 1938-ம் ஆண்டு பங்குனிமாசம் 18-ம்தேதி வெள்ளிக்கிழமை அவர் பரலோகம்சென்றநாள். அவரும் அவரது அருமைமனைவியாரும் நம்மில்காட்டின—காட்டுகின்ற அன்பை நாம் மறவோம்.

உடுத்துறையில் பிறந்துவளர்ந்தவரும் கனம் D. P. மூத்ததம்பி உபதேசியாரவர்களின் உடன்சகோதரரும் ஆசிரிய

**கனம் J. P. இளையதம்பி ஆசிரியர் அவர்களின் மறைவு**

சேவை செய்து இளைப்பாறியிருந்தவருமாகிய கனம் J. P இளையதம்பி ஆசிரியரவர்கள் தமது 70-ம் வயதில் 1940-ம் ஆண்டு மாசிமாதம் 1-ந்தேதி இவ்வுலகவாழ்வைமுடித்து பரமபதி சென்றார். இவரது நேர்மைக்குணம் இன்றும் நமக்கு முன்மாதிரி. இவர் நமது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபைக்குரியவரும் நமது அன்புக்குரியவருமாவர். இவரது பிரிவும் நம்மிற் பலருக்கும் நீங்காக்கவலையும் நட்டமுமே.

கிறிஸ்துசுவாமியின் இரத்தபுண்ணியங்களில் உறுதியான அத்திவாரமிடப்பட்டு எத்தனையோ அங்கிலேய பாதிரிமார்கள் தம்மைத்தாமே வெறுத்துத் தமது சரீரங்களைக் கசக்கிப்பிழிந்து சிந்திய இரத்தத்தாலும் ஏனைய பரிசுத்தவான்களின் அரும்பாடுகளாலும் செழித்து வளர்ந்துவந்த நமது உடுத்துறைச் சபையானது ஆவியின் ஒருமைப்பாட்டிலும் பரிசுத்தத்திலும் வளர்ந்து அனல்கொண்டு கதிர்விட்டொளிவீசி நமது இரட்சகர் இரண்டாம்முறையாக வரும்போது அவரை எதிர்கொள்ளத் தகுதிவாய்ந்த பரிசுத்த மணவாட்டியாகக் காக்கப்பட அனாதிநித்திய சுயம்புவாய் அகண்ட பரிபூரணானந்த வஸ்துவாய் அனந்த பரிபூரண குணசகிதராய் சகலலோக பரிபாலனராய் சர்வவல்லமையும் சர்வஞானமும் நிறைந்த சாக்ஷாத் திரியேக தெய்வமாய் அன்பின்வடிவாய் விளங்குகின்ற கர்த்தராகிய இயேசுசுவாமி தாமே பூரண கிருபை பாலித்தருள்வாராக. ஆமென்.

### அறுசீராசிரியவிருத்தம்

பொன்னகர் ஒருவி வந்து பொருப்பினில் உதிரஞ் சிந்தித்
தன்னுயிர் ஈந்து பெற்ற தருதிருச் சபையை நோக்கி
மின்னுக பரிசுத் தாவி மிகமிகப் பொழிக என்பேன்
துன்னகம் நிறைந்த தூய எம்பிரான் அடிகள் ஏத்தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக்கட்டுக்குப் பணம் உபகரித்தோர் நாமாவலி

| | | ரூ. ச. |
|---|---|---|
| Mrs | L. G. ஜயாத்துரை ... ... | 1-00 |
| ,, | G.G. குணரத்தினம் ... ... | 1-00 |
| ,, | J. அருட்பிரகாசம் ... ... ... | 4-00 |
| ,, | S. G. கந்தையா ... ... ... | 2-00 |
| ,, | J. P. டானியேல் ... ... ... | 2-00 |
| ,, | P. D. சின்னத்தம்பி ... ... | 1-00 |
| ,, | G. குமாரசாமி ... ... ... | 5-00 |
| ,, | P. D. சின்னையா ... ... ... | 1-00 |
| ,, | A. சபாபதி ... ... ... | 10 00 |
| ,, | P. மோட்டிமர் ... ... ... | 20-00 |
| ,, | E.P. இரத்தினசிங்கம் ... ... | 10-00 |
| ,, | சுப்பிரமணியம் ஹாரிஸ் ... ... | 5-00 |
| ,, | E. A. ஹென்ஸ்மன் ... ... | 5-00 |
| ,, | வேதவனம் ... ... ... | 1-00 |
| ,, | E. P. ஆபிரகாம் ... ... ... | 10-00 |
| ,, | R. P. டானியேல் ... ... ... | 1-00 |
| ,, | J. A. பேரின்பநாயகம் ... ... | 5-00 |
| ,, | S. G. நவரத்தினம் ... ... ... | 2 00 |
| ,, | யேசுதாசன் ... ... ... | 3-00 |
| ,, | P. E. செல்லையா ... ... ... | 29 00 |
| ,, | பரிமளம் சின்னையா ... ... ... | 5-00 |
| ,, | S. குணநாயகம் ... ... ... | 25-00 |
| Miss | A. M. கதிரேசு ... ... ... | 5-00 |
| ,, | E. P. சாமுவேல் ... ... ... | 5-00 |
| ,, | J. T. அரியரத்தினம் ... ... | 5-00 |
| ,, | R. R. சின்னத்தம்பி ... ... | 5-00 |
| | | 168-00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | முற்பக்கப்படி ... | 168-00 |
| Miss | R. செல்வத்துரை ... ... ... | 2-00 |
| ,, | M. ஜெயமணி செல்லையா ... ... | 5-00 |
| ,, | R குணமணி செல்லையா ... ... | 5-00 |
| ,, | A. செல்வரஞ்சிதம் சின்னையா ... | 5-00 |
| Rev. | J. A. R. நவரத்தினம் ... ... | 104-40 |
| ,, | I. S. இரத்தினசிங்கம் ... ... | 20 00 |
| ,, | J. T. அருளானந்தம் ... ... | 5-00 |
| ,, | D. S. இரத்தினசிங்கம் ... ... | 2-50 |
| ,, | T. D. சத்தியநாதன் ... ... | 5-00 |
| ,, | W. யோசேப் ... ... | 1-50 |
| Dr | ஐசக் தம்பையா ... ... | 3-00 |
| ,, | A. N. மூத்ததம்பி ... ... | 92-00 |
| ,, | A. A. செல்லையா ... ... | 5-00 |
| ,, | D. P. லோறன்ஸ் ... ... | 7-50 |
| ,, | D. ஈசாக்கு ... ... ... | 80-00 |
| Mr | D. H. சின்னையா ... ... ... | 100-00 |
| ,, | K. K. கணேசன் ... ... ... | 1-00 |
| ,, | J. செல்லையா ... ... ... | 1-00 |
| ,, | N V. செங்கோடன் ... ... | 1-00 |
| ,, | V. K. பொன்னையா ... ... | 1-00 |
| ,, | G. R. குணநாயகம் ... ... ... | 5-00 |
| ,, | M. சின்னையா ... ... ... | 285-00 |
| ,, | A. தம்பையா ... ... ... | 10-00 |
| ,, | V. போல் தாமு ... ... ... | 3-00 |
| ,, | யூலியன் பிலிப் ... ... ... | 15-00 |
| ,, | J. S. சின்னையா ... ... ... | 65-00 |
| ,, | J. V. சின்னையா ... ... ... | 18-00 |
| ,, | D. P. மூத்ததம்பி ... ... ... | 70-00 |
| ,, | D. J. தம்பிராசா ... ... ... | 5-00 |
| ,, | V, சிவரத்தினம் ... ... ... | -50 |
| Mudaliyar | A. A. முத்துக்குமாரு ... ... | 10-00 |
| | | 1101-40 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | முற்பக்கப்படி ... | 1101 40 |
| Mr. | M. தம்பையா ... ... ... | 150-00 |
| " | C. A. பாக்கியநாதன் ... ... | 115-00 |
| " | M. முத்தையா ... ... ... | 90-00 |
| " | J. P. இளையதம்பி ... ... ... | 30-00 |
| " | S. செல்வரத்தினம் ... ... ... | 1-00 |
| " | S. A. இராமலிங்கம் ... ... | 10-00 |
| " | C. S. இராசையா ... ... ... | 5-00 |
| " | C. S. இராசநாயகம் ... ... | 5-00 |
| " | T. தேவதாசன் ... ... ... | -25 |
| " | S. சிவரத்தினம் ... ... ... | 6-75 |
| " | E. R. A. சைமன் ... ... ... | 5-00 |
| " | T. செல்லத்துரை ... ... ... | 1-00 |
| " | K. P. முத்தையா ... ... ... | 15-40 |
| " | E. M. மயில்வாகனம் ... ... | 5-00 |
| " | J. C. கணபதிப்பிள்ளை ... ... | 75-00 |
| | டிெ சேர்த்தது ... ... ... | 41-00 |
| " | A. K. தம்பிராசா ... ... ... | 40-00 |
| " | S. சத்தியநாதன் ... ... ... | 30-00 |
| " | J. முத்தையா ... ... ... | 100-00 |
| " | S. B. முத்தையா ... ... ... | 2-00 |
| " | J. P. அரியநாயகம் ... ... ... | 1-00 |
| " | A. V. கனகசபை ... ... ... | 2-00 |
| " | C. W. நியூட்டன் ... ... ... | 5-00 |
| " | M. A. அருட்பிரகாசம் ... ... | 5-00 |
| " | J. A. J. திசைவீரசிங்கம் ... ... | 5-00 |
| " | E. R. வில்லியம்ஸ் ... ... ... | 1-00 |
| " | J. P. குணரத்தினம் ... ... | 1-00 |
| " | S. R. சதாசிவன் ... ... ... | 2-50 |
| " | M. சாமுவேல் ... ... ... | 10-00 |
| " | J. C. நல்லதம்பி (சேர்த்தது) ... | 15-00 |
| " | S. N. ஆறுமுகம் ... ... ... | 18-00 |
| | | 1894-30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| | முற்பக்கப்படி ... | 1894 30 |
| Mr. | F. T. ஜோன் ... ... ... | 5-00 |
| ,, | S. A. P. வெஞ்ஞன்ஸ்டோ ... ... | 10-00 |
| ,, | P. A. தாதர் ... ... ... | 5-00 |
| ,, | V. தம்பு ... ... ... ... | 5-00 |
| ,, | S. S. வெஞ்ஞன்ஸ்டோ ... ... | 10-00 |
| ,, | K. இராசையா ... ... ... | 5-00 |
| ,, | E. D. இராசரத்தினம் ... ... | 1-50 |
| ,, | S. M. ஜோன் ... ... ... | 2-00 |
| ,, | E. V. செல்வநாயகம் ... ... | 5-00 |
| ,, | V. கனகசபை ... ... ... | 1-00 |
| ,, | A. P. சின்னத்துரை ... ... | 15-00 |
| ,, | S. V. இளையதம்பி ... ... ... | 5-00 |
| ,, | V. D. கந்தையா ... ... ... | 3-00 |
| ,, | T. M. கந்தையா ... ... ... | 10-00 |
| ,, | K. P. நாகலிங்கம் ... ... ... | 3-00 |
| ,, | S. V. சின்னப்பா ... ... ... | 10-00 |
| ,, | A. D. சுப்பிரமணியம் ... ... | 5-00 |
| ,, | G. S. சுப்பிரமணியம் ... ... | 20-00 |
| ,, | E. C. டானியேல் ... ... ... | 10-00 |
| ,, | T. குணநாயகம் ... ... ... | 57 50 |
| ,, | V. இராமசாமி ... ... ... | 5-00 |
| ,, | N. சின்னச்சாமிசெட்டி ... ... | 2-50 |
| ,, | N. H. சாம் சமன் ... ... ... | 1 00 |
| ,, | J. ஜேகப் ... ... ... ... | 7 50 |
| Mr. & Mrs. | V. D. பொன்னையா ... | 95 00 |
| R. M. E. & Co. | ... ... ... | 15-00 |
| S. P. S. S. & Co. | ... ... ... | 10 00 |
| D. B. மிஷன் | ... ... ... ... | 200 00 |
| G. B. விக்டல் சோப்பாய் | ... ... ... | 3-25 |
| உடுத்துறை கமிறூல் | ... ... ... | 6-00 |
| ஒரு அன்பர் | ... ... ... ... | 3-00 |
| | | 2430 55 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முற்பக்கப்படி ... | 2430-55 |
| சுண்ணாம்புவிற்றகாசு ... ... ... | 194-66 |
| முருகைக்கல் ,, ... ... ... | 220-00 |
| பனை வளை ,, ... ... ... | 6-70 |
| வங்கியிலிருந்து கிடைத்தது ... ... | 185-04 |
| ஓய்வுநாட்காணிக்கை ... ... ... | 9-84 |
| ஸ்தோத்திரப்பலி ஆராதனை ... ... | 645-17 |
| நல்லூர் ஆலயக்கொம்மிற்றி ... ... | 15-94 |
| பழையகையிருப்பு ... ... ... | 2000-00 |
| மொத்தம் ... | **5707-90** |

## ஆலயக்கட்டுக்கு பொருள் உபகரித்தோர்

1. பலிபீட மாபிள்கல்:
   சங். F. L. பெவன் அவர்கள்,
   ஆர்ச் டீக்கன் கொழும்பு

2. ஓடும் வேய்ந்தசேலவும்:
   ஸ்ரீமதி இராசசிங்கம் அம்மையார்

3. றெயிலிங்: (பலிபீடக்கிறுதி)
   ஸ்ரீமதி தம்பு அம்மையார்

4. லெக்ரேண்:
   ஸ்ரீமதி C. T. வில்லியம்ஸ் அம்மையார்

5. வாசிப்புமேசை:
   சங். J. A. R. நவரத்தினம் அவர்கள்

6. விளக்கு:
   கனம் J. J. [illegible] அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அநுபந்தம் A

நமது சபைவிருத்திக்குக் காரணமான ஐந்து ஐரோப்பியப் பாதிரிமாரின் சரித்திரசம்பவக் குறிப்புகள் :

1. சங். கனம் J. D. சிமன்ஸ் ஐயர்

**Rev. Jonathan Dean Simmons**

இவர் நமக்கு மிக அருமையானவர்

**1835**-ம் ஆண்டில் பிறந்தார்.

**1860** ல் டீக்கன்பட்டம்பெற்றூர். இவ்வாண்டில் கரோலின் J. போல்டன் என்னும் அம்மையாரை திருமணம் புரிந்தனர்.

**1862** ல் குருப்பட்டம்பெற்றூர்.

**1861—1874** இப்பதினான்காண்டுகளிலும் தென்னிந்தியாவில் திருநெல்வேலியில் ஊழியம்செய்தனர்.

**1874** ல் மார்கழி மீ **24**-ந் உ யாழ்ப்பாணத் தலைமை மிஷனரியாக நியமிக்கப்பட்டு நல்லூரில் வந்துசேர்ந்தனர்.

**1903** ல் இளைப்பாறி இலங்கைவிட்டகன்றனர்.

**1914** ல் பங்குனி மீ **27** ந்உ பரதீசுசென்றனர்.

2. சங். கனம் E. M. கிறிவித் ஐயர்

**Rev. Edward Moul Griffith** (B. A., Camb.)

**1843**-ல் பிறந்தார்.

**1867**-ல் மேரி ஸ்கின்னர் மாஷல் என்னும் அம்மையாரை மணம்புரிந்தனர்.

**1890**-ல் பங்குனி மீ **13**-ந் உ பரதீசுசென்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. சங். கனா். J. I. பிக்வோட் ஐயர்

**Rev. Joseph Ingham Pickford**

1878 ல் டீக்கன்பட்டமும் குருப்பட்டமும்பெற்றார்.

1880 ல் மேரி யங் என்னும் அம்மையாரை மணஞ் செய்தனர்.

1907 ல் இளைப்பாறிச்சென்றனர்.

4. சங். கனம் H ஹோஸ்லி ஐயர்

**Rev. Hugh Horsley** (M. A., Camb.)

1873-ல் டீக்கன்பட்டம்பெற்றார்,

1877-ல் குருப்பட்டம்பெற்றார். மணம்முடித்தார்.

1873—1879 இவ் ஏழுவருடங்களும் திருநெல்வேலியில் ஊழியம்செய்தார்.

1894-ல் இளைப்பாறி இலங்கைவிட்டகன்றனர்.

5. சங். கனம் W. J கனன் ஐயர்

**Rev. William John Hanan** (M. A., Dub.)

1895-ல் டீக்கன் பட்டம்பெற்றார்.

1897-ல் குருப்பட்டம்பெற்றார்.

1899 ல் மிரியம் கிளாக் அம்மையாரை திருமணம்புரிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுபந்தம் B

# திருச்சிலுவை அந்தாதி

காப்பு வெண்பா

வன்பின் பவபாசன வன்கூர் ஒடித்ததுவும்
இன்பின் கதியாய் இறங்கியதும் — அன்புதந்து
நின்றுபொறை காட்டுவதும் நீசனேனை
குன்றிலிழிந் தூற்றகுரு தி. [ஆண்டதுவும்

அவையடக்கம்

எழுசீர் ஆசிரியவிருத்தம்

சிங்கமொடு யானைபுலி சேர்ந்துவாழ் வனமதில்
சிற்றெறும் புந்திரி தல்போல்
பொங்கிரவி யொடுசிறிய மின்மினியும் வருதல்போல்
போதமறு பாடல் சொற்றேன்
சங்கமுறு தமிழ்வலார் பிழைபொறுத் தருள்கலித்
தரணிதனில் எளியர் பாவப்
பங்கமுறு வோர்க்கினிய பரமகுரு வோபிழைகள்
பாரார் பொறுப்பர் நிசமே.

வரலாறு

கட்டளைக்கலித்துறை

தாவீதின் கோத்திர அண்ணல் அடிகள் கலியில்வைத்தே
பாவின் இலக்கணம் தன்னை மதிக்கிலன் பாருலகில்
ஏவு மனப்படி தீவினை செய்தே எனைநிகர்த்த
பாவிகட் கென்றிச் சிலுவையந் தாதி பகர்ந்தனனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

### கட்டளைக்கலித்துறை

1. அன்பா லுலகம் அமைத்தவர் நித்தியர் ஆதியிலார்
அன்பா லுருவ முடையவர் கல்லுளத் தாசனர்முன்
அன்பால் உதிர முகுத்தவர் என்னையும் ஆண்டுகொண்டார்
அன்பால் நரரை அளிப்போர் உலகுக்கொர் ஆதவனே.

2. ஆதவ கோடி அகக்கைதகள் அக்ரமம் ஆற்றினைந்த
பாதகன் யானென நீதா னறிவை பலவறிவர்
நோதக னைந்தேன் நொறுங்கு மனத்தினை நோவகற்றும்
நீதக வுந்தன் திருவடி சேர்ந்தேன் திருவருளே.

3. அருளைப் பழித்தேன் அறுமூன் றுடனிரண் டாண்டு
மருளிற் தரித்தேன் மதியிலர் யாத்த வறுங்கனிகள்[களாய்
பொருளிற் கெனப்பயின் றன்பின் பெருக்கையும்
[போக்கடித்தேன்
தெருளைத் தருவாய்! தெவிட்டா நறுஞ்சுவைத் தீங்
[கனியே.

4. கனியே! கனியின் சுவையே! சிலுவையின் காதலனே!
துனியே யடைக்கெமை மீட்டனை பாவத் துகள்தவிர்ப்
[பாய்
இனியே என்சிவன் தரியாதுன் அன்பின் இணையடிகள்
தனியே உளத்தில் உறைய எனக்குத் தராவிடினே.

### நிந்தாஸ்துதி

5. ஏயவுன் அன்பை எளியேற் கருளாய் எனிலுதிரம்
பாய மரத்தில் பதைத்ததும், பாடுகள் பட்டதுவும்,
தீயர் வதனத் துமிழ்ந்ததுவும், சீர்விழி சோர்ந்ததுவும்,
தூயஉன் ஆவி துறந்ததுவும் நான்சொலித் தூற்று
[வனே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஆற்றங் கலமொரு கையுடை யாய்துணை யற்றாவில்
தோற்றும் வியர்வை யுதிரத் துளியைச் சொரிந்ததுவும்,
"மாற்றும் பிதாவேஇப் பாத்திரம்" என்றுமன் றாடி-
[னதும்
சாற்றும் சிலுவையி னன்பே! இப் புன்மையன்
[தன்பொருட்டே.

7. பொருது புவிமுழு தெய்தி யவனி புரந்திடினும்
விருது புகழுந் நறிவின் கரைகண்டு மேவுறினும்
சுருதி பகரும் மரணக் கொடுமை சுடும்பொழுது
கருதும் சிலுவை யடையா ரொளிர்கண் கலங்குவரே.

8. வரத்தி லுயர்ந்திடு தெய்வ மகத்துவ வான்பொருளே!
கரத்தி லாத்தி லடித்து வதைத்துதி ரம்பெருக
சிரத்தி லடித்து வருத்திய நூகச் சிதடருக்கும்
பரத்தில்மன் னிப்பரு ளப்பனிந் தாயே பரம்பரனே!

9. பரமண் டலமதிற் றூதர்கள் செய்த பணிதுறந்து
உரமண் டலமரும் பாவத் திரளின் உருக்கமதால்
சுரமண் டலந்தும் புருவொடு தூதரும் சூழ்ந்தியம்ப
நரமண் டலமதி லுற்றவுன் னன்பை நவிலுவதே.

10. தேசி விரவி செழுக்கும் மணல்வெளி சேர்தருவே!
பேசும் வலியற நாவுலர்ந் தாலும் பெய்புனலே!
வீசும் மணமும் அழகும் நிறைந்த விரிமலரே!
நீச னுனக்குமுன் னன்பை நிறுவு நிலைத்திடவே.

11. வேதப் பொருளே! விளக்கே! ஒளியே! வினையுமன்பின்
ஓதப் பெருக்கே! எனவுனைப் போற்றி உரைப்பரன்பர்
பேதைக் கதுவோ பயித்திய மாகப் பிறழ்ந்திடுங்கல்
வேதப் படிப்புமொர் வீண்வினை யாக விளங்கிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. விளங்கும்அத் தீர்க்கரின் சொல்லில் விளங்கிய
[வித்தகனே!
துளங்க மரணம் அரவுறு சென்னி துகள்படவே
முழங்கிய கெர்ச்சித வீர வரோதய முன்னவனே!
வழங்குக அன்பெனக் கையா! எனவே வழுத்துவனே.

13. வழுத்த அறியேன் வழுத்தா துலைச்சேர் வகையறி
[யேன்
பழுத்த சிலுவைப் பழமேயென் பாவம் சுமந்திளைத்தாய்
விழுத்தகிச் செய்கைக்கு விண்மண் தரினும் மிகு
[குறைவே
கொழுத்தகு யேசு எனுந்திரு நாமம் தொடரின்பமே.

14. இன்பப் பெருக்கே! எளியனேன் பாவ இடர்தவிர்க்கும்
அன்புப் பெருக்கே! அருளே! எனைக்கைக் கழுகிடுவன்
என்பும் உருகப் பெருகி இதயம் இனித்திடுமுன்
துன்பப் பவவேர் அறுமிது பக்தர் அனுபவமே.

15. மேட்டிற் சிலுவை மரமாகி நின்றதும், மெய்யுடலில்
ஈட்டி யெனவே நுழைந்ததும், முண்முடி என்றிருந்து
வாட்டித் தலையை வதைத்ததும், தீமை வளர்வினைகள்
காட்டும் எளிய கடையேன் பவத்தின் கணங்களன்றே.

16. கணங்களும், பேய்களும், பூதமும், காளியும், காக்கு
[மென்றே
வணங்கிப் பழியும் பவமும்பெற் றையை வறிதிளைத்தேன்
மணங்கமழ் வண்மலர்ச் சீயோன் நகரின் மணமகட்கே
இணங்கிய ஐயா! அடைக்கல மென்றெனை ஈந்தனனே.

17. தனதா னைவத்திற் தரித்துன தன்பரைச் சாடியவற்
குனதாரன் பின்பெருக் கூற்றியுன் னூழிய ருக்கலையோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனதான்ம சக்தி இழந்து தவிக்க இடருறுத்தும்
மனமதைப் பிணித்தலரிதோ? உனக்குமெய் மன்னவனே.

18. மன்னவன் சேயுனக் கேசா னடிமையிம் மாநிலத்தில்
பன்னுமென் றந்தையும் நீமகன் நானெனப் பாத்திரனே
அன்னையும் நீயாய் அணைத்தது கண்டும் அகப்புழை
[யோன்
என்னவென் சிந்தை இரும்போ? இரங்குக யேசை
[யனே.

19. யேசு வெனுந்திரு நாமமல் லாலிவ் விருநிலத்தாக்
காசு தவிர்க்கும் அடைக்கலம் வேறிலை ஆதலினால்
பேசும் நினைக்கும் செயும்பாவச் சேற்றில் புரண்டிடலில்
மூசும் நிலைவிட வர்கருள்! சாதனைப் போதகனே.

20. போதகம் பழுத்தவன் பொன்மொழி தன்னிற் புலை
[யன்செயும்
வாதக ளெத்தனை? வஞ்சக மெத்தனை? வாய்மொழியின்
தீதுக ளெத்தனை? தீச்செய லாதிய தீமைகளின்
சூதுக ளெத்தனை? தூய பரிசுத்த சோதியனே.

21. சோதிச் சுடர்மறு ரூப மடைந்தனை துர்க்குணங்கள்
சாதித் தழன்ற புலையேன் எனுமிந்த சத்துருவை
சேதித் திடாதவன் அன்னைக் கிருபையைச் செப்
ஆதிப் பரம்பொரு ளே!உந்த னாவி அருளுகவே![பிடவே

22. ஆவி யருள்க! அடியே னுயிர்பெற அங்கமுடன்
ஆவியும், ஆத்துமம், புத்தியும் சுத்தம் அடைந்திடவுன்
ஆவி யருளுக! அன்பு பெருகி அகம்நிரம்ப
ஆவி யருளுக ஐயா! வணங்க அடைந்தனையே.

23. உன்னை யொழிய ஒருவரை நம்பா உளமருள்வாய்
அன்னை மரியின் அகட்டினில் உற்பவித் தன்பருளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்னிய சிவ நிதியே!து ரிச்சையும் துர்க்குணமும்
பின்னி நிறைந்தவென் னுள்ளமும் தேங்கப் பெருகுகவே

24. பெருகுங் கடலையும் கையா லடர்த்தும் பெரியவனே!
கருகும் பொறாமை சினமொடு காமம் கலந்தபவம்
அருகும் படியருள் தந்தெனை ஆளல் அரிதானக்கோ?
பருகும் விடாய்போல் நினைத்தொழச் செய்வாய்
[பரஞ்சுடரே.

25. சுடரும் மகிமையின் தூய பரனே தொடர்ந்தபிடித்
தடரும் பவவினைக் காற்றாது நைந்தே னடைக்கலமென்
திடரும் தவிர்க்கு முனை அடைந் தேன்பவத் தின்சுவை
[யால்
மிடரும் வலைத்திட வந்தேன் அணைப்பாய் பெரியவனே.

26. பெரியவன் புத்தநல் என்னைஎன் றுணர்ந்தன் பிள்ளைகட்
உரிய குருதி உகுத்திடு வானோ? உனை அடித்த [காய்
தரியலர் பாவிகள் தாக்கி வதைத்தவர் தங்களுக்காய்
அரிய குருதி உகுத்தாய் அவனியில் அற்புதமே.

27. அற்புத சிற்பர சின்மய ஞான அருட்குருவே!
புற்புத மான உலகினை நம்பிய புன்மையினால்
பற்பல நன்மை யிழந்தேன்உன் அன்பிற் பயித்தியமாய்
நிற்பதெக் காலோ? நிரப்புக அன்பினில் நித்தியனே.

28. நித்தன் நிராமயன் நின்மலன் நின்ற நிருவிகற்பன்
சுத்தன் சுருதியின் அந்தன் இறிஸ்து சுதன்பரனென்
றுத்த மனத்தரி னித்தம் துதிப்பவர் ஓகையராய்
நித்திய சிவ னடைந்து பரனில் நிலைப்பவரே.

29. நிலையா வுலகைப் பொருளைச் சொகுசை நிலைக்குமென்றே
மலையா மயங்கி மரக்கொம்பு கைவிட்ட மந்தியைப்போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையாய் வருந்துயர் கண்டு நடுங்கி மனமடிவேன்
அலையா வகையெனை ஆதரிப் பாய்நரர்க் காரமுதே.

30. ஆரமு தோடு கனிதே னிகர்க்கும் அறவுரைகள்
பாரக முய்ய மலைமே லமர்ந்து பவமற இதழ்ச்
சிறுநல் பாடும் திருவாய் மலர்ந்த திரித்துவமே!
நீரகம் வந்து வசித்திட வேண்டியே நிற்பனின்றே.

31. இன்றேன் துளிக்கும் இயல்பே! இரவில் இடையர் [தொழும்
குன்றே! செபித்தேன் நரக மரணக் கொடுமையெல்லாம்
என்றே பவுல்போல் முழங்கிடத் தூய இயல்பளிப்பாய்
சென்றே பதங்கள் சிவக்கவும் நன்மைகள் செய்தவரே.

32. செய்யகல் வாரி மலைமே லுயர்ந்த சிகரமதில்
துய்யனுக் காற்றறு கண்கள் திறந்தொரு சோரி [வெள்ளம்
மெய்புறு சீவ நதியாய் பரந்தது மெய்யன்பர்கள்
பொய்யறுத் தானந்த மாகக் குளித்துப் புரண்டனரே.

33. புரண்டு வருமிந்த மாநதி யாடின் புனிதமுறும்
இரண்டு கதியினும் இன்பங்க ளாகும் இவைகளல்லால்
திரண்ட பரம அரசியல் மாநிலத் தேசொளியும்
வரண்ட மனங்கள் வளமுறும் அன்பு வழிந்திடுமே.

34. வழிந்த உதிரமும் வாயினிற் காடியும் வஞ்சகர்வாய்
மொழிந்த மொழிகளும் முள்ளின் முடியும் முகமலரில்
இழிந்தபுல் லெச்சிலும் ஆய துயர்கள் இருந்திடினும்
அழிந்தன வல்லவுன் அன்பும் அகத்தின் அலர்ச்சியுமே.

35. மேதிநன் னீரைக் கலக்கி அருந்தும் வினையதுபோல்
வேத மொழிகள் புரட்டிப் புரட்டுகள் வேண்டுமட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதக மாக நுழைந்துப தேசங்கள் சாற்றிடுந்தூர்ப்
போதகர் மாருடன் கூடவி டேலன்பின் பொக்கிஷமே.

36. பொக்கிஷம் நீயிரு மைக்குமெ னக்கது போதுமென்ற
தக்க மனமுந் தருமுனை வாசரு [illegible]றக்க
மிக்க விழிநீ ருகுத்துளம் பொங்கிய மேலவரே!
துக்க முறுவே னெனக்கு மிரங்குக தூயவரே.

37. தூயநின் வஸ்திரந் தொட்டுச் சரீர சுகமடைந்த
நீடநோய் மங்கை புனிதசு வாசமுந் திருசித்தோன்
தேய மடந்தையின் தாழ்மையுந் தந்தெனைச் சேர்த்
[துணைப்பாய்
நாயனே யேசுனை தார்புகழ் பாடி நவிலுதற்கே.

38. நவிலற் கரியநிட் டூரக் கொடுமைகள் நாசிகந்த
கவலைக் குறுவினை பற்பல செய்து கனைத்தவர்க்கும்
அவலப் படுங்கொடும் வேளையில் அன்பால் அருணெதிரத்
திவலை யகத்தளித் தேவிளை யுந்துயர் தீர்ப்பவரே.

39. தீராப் பவப்பிணிக் கென்று விளைந்த திருமருந்தே!
காரார் மனத்திரும் பிப்பெரும் வாழ்வின் களிக்கவைக்கும்
வீரா! உனைமுழுக் காலமும் அன்பில் விசுவசிக்கும்
சோரா மனமருள் வாய்சுவி சேஷங்கள் சொல்பவரே.

40. சொல்லா ருனது சுவிசேஷம் மாட்சச் சொருசுகளில்
வல்லார் உனைமனத் தன்பொடு வாழ்த்தும் வகையறி
[யார்
கல்லார் பரிசுத்த வேதமுன் னன்பிற் கடைசிமட்டும்
நில்லார் தமக்குறு தாகம் நித்ய நிரயமதே.

41. மதமால் மடைமை நிறைந்தஅவ் வேழை மனுக்களுக்கே
பதமாய அன்பின் தெருள்தெய்வ ஞானம் பகர்ந்தனையால்
இதமாய தெய்வ ரகசிய மென்றே இசைபுணர்ந் தேதன்
நிதமே பரம நினைவி னுளமருள் நித்தியரே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

42. நித்தம் வதைத்து நெருப்பிற் புகுத்தி நெருக்கிநனி
சித்தப் படிகொடும் செய்கைக ளாற்றும் சிறைகளிலும்
ஒத்த மனத்துன தன்பரின் ஓகையு டன்பொறுமை
பத்தி நிறைவினை பெற்று மருளுனை பண்புறவே.

43. பண்ணார் அறுபத மார்க்கிடு பூம்பொழில் பக்கமுறும்
தண்ணார் நதியின் ஒழுக்க மியங்கும் தடவயல்சூழ்
கண்ணார் எருசலைப் பெண்ணை நினைந்துகண் ணீருகுத்த
அண்ணல்! உனதன்பின் ஆழம் அறிந்தில எப்பொ
[ழுதே.

44. அப்பா! எனதைய! இன்னவர் செய்வதென் னென்
[றறியார்
தப்பா திவர்க்கு மன்னிப்பரு ளென்று தலைகரங்கால்
துப்பா ருதிரம் சொரியவு மன்பிற் றுதிக்கனையே
இப்பாரி லெங்கும் இதுவொரு செப்பி இயம்பிடவே.

45. இயம்ப மறுதலிப் பாவென இல்லை யெனநிலைகின்
றயம்புரை நெஞ்சு தளர்ந்த மறுதலித் தானவனை
நயம்பொலி கூர்த்த கடைக்க ணெறிந்து நதியிலன்பு
மயம்பொலிந் துள்ள முருகிடச் செய்தவன் மாய
[மென்னே!

46. மாய வுலகின் மகனென நின்றனன் மாபவங்கள்
ஏய வுளத்தின ராயினும் ஈருனை என்புருக
மேய வுளந்தவ தன்னெனை மேனி மயிர்பொடிப்ப
நீயல தில்லை எனப்பணிந் தன்புறும் நேர்மையதே.

47. நீரே அடைக்கலம், கோட்டை,யென் நம்பிக்கை
[நீணிலத்திற்
சீரே தருகுவர் தீமையின் கண்ணணி சிலைதயவருள்
வாரே எனவுன தன்பர் வழுத்தும் வகைதனையிப்
பாரே அறிந்தில திச்சை வழியே படர்கிறதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

48. படரும் கடன்மிசைப் பத்தர்கள் ஏங்கிப் பதைபதைக்க
படவி லமர்ந்து துயின்றனை அன்றந்தப் பான்மை
[யைப்போல்
ஆடரும் துயர்க்கட லாழ்ந்து தனிக்கும் அடியனுக்காய்
இடரும் தவிர்க்க வாராது துயிலுதல் எப்படியோ?

49. எப்படி யேனுமுன் பிள்ளைகள் கூடி இருந்தருந்தும்
அப்பொழு தங்குறு மேசையின் கீழிருப் பப்பமதைத்
தப்பு மசுத்தமும் கூடிய நாய்க்குத் தருகுவையோ?
செப்பு நரக மரணம் சிலுவையில் செற்றவரே.

50. செற்றனை பாம்பின் விஷமும் உலகச் செருக்குகளும்
விற்றனை நின்னுயிர் தேசுறும் நம்மை விலைகொடுத்து
பெற்றனை யோர்கிரி மீதினி லேறிப் பெரிதமர்ந்து
சொற்றனை பாக்கிய சீவ வசனங்கள் தோன்றிடவே.

51. தோன்றும் பகைத்திடர் நோக்கிப் பெருமரம் தோளில்
[வைத்தே
ஊன்று பதங்கள்தள் ளாட மரம்மேல் உறுத்திடலால்
கான்றுகண் ணீருக வேர்வை துளித்திடக் கஷ்டமுறும்
ஆன்றவ அன்பி னிருப்பே! இப் பாடே னடைந்தனையே?

52. தனையே பலியெனக் கல்வாரி மீதினில் தந்தனித்தே
எனையே பலியென ஏந்தேன் கிருபையில் ஏற்றருள்
[வாய்
உனையே அறியா தவையில் சினம்மனத் துற்றிருந்தவன்
பனையே யனையதன் கையா லடிக்கவும் பட்டனையே.

53. பட்ட மரத்தினிற் கென்னசெய் யாரிந்தப் பச்சைமரம்
பட்டிட வாக்கினை செய்தன ரென்று பரித்ததலால்
நட்ட முறுத்திச் சபித்திட வெண்ணலை நாருதலால்
அட்ட திசைபுவி அண்டப் பரப்பும் அமைத்தவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

54. அனைவு மழுகினிற் பாலரை அஞ்சி லிணைக்ககரம்
தனையும் மடக்கிப்பின் கட்டினிற் கட்டுக் கலையுடனே
இனையும் பொருந்தா திரவு முழுதும் இடரடைந்தே
எனையுந் தாவையும் ஒன்றாக்கி அன்பி லிணைக்கலையே

55 கலைய விழுந்த விதனை துயரம் கனித்தவரே
வினையி லுழன்ற விபசார மங்கையை மீட்டவரே
மனைகள் பலவடைக் கின்பதுன் பங்கள் அனுபவிக்க
உலையே அடைந்தே னடைக்கல மென்கிறனே
[உய்த்தனனே.

56. உய்த்த கடன்மே னடந்ததும் நன்மை உருற்றகடக்
கெய்த்ததும் ஆணி புகுத்தே உதிரம் இழிந்ததுவும்
னைத்தலை பாம்பிற் குடைத்தது மாயமெசம் பாதமலர்
வைக்கிதனை யாண்டுமிகாள் அன்பா வுதிரம் வழிக்
[கவரே.

57. வழிவழிக் கல்வியின் வல்லமை தாக்கவிந் ஞானமுற்ற
ஒழிவதும் ஞானிக்கும் கீட்டின் வழிமை உகந்தலற்கும்
பழிபொருடு பால மறுத்த சிலுவைப் பரித்தியமாம்
அழியாச் சிலுவையி னன்பர்க்குத் தேவ பெலனுமதே.

58. பெலனும் கலையும் மதியும் இலாதவப் பேதைகளே
வல்லுப் அருள்விக அரசரும் ஆவியும் வாய்ந்தவராய்
நலனுமுன் னன்மையும் நாடெங்கும் சென்று நவில
[வைத்தாய்
வல்லமைவல் லோனுக்குப் புல்லுமபோ ராயுதம் வைய
[கத்தே.

59. தேவனுன் பாமனல் குன்றிச் சிலுவைச் செயன்மறந்தே
பாவத்தி விற்றரித் தியாவரும் கெட்டு வழிவிலகி
மேவிய கால மீதிலிந்தப் பாவியுன் மேன்மையுற
ஆவி யருளுக! மீண்டவ ரேளமை ஆண்டவரே,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60. ஆண்டு நிரம்பி நரைக்கும் சிசுவை யடைவினின்று
மீண்டும் மதலையைச் சொற்படி வெட்ட விரைந்துநின்ற
காண்டற் கரிய விசுவாச சிந்தை களித்தருள
வேண்டி யிரந்தனன் அன்பினுக் கூற்று விளைந்தவரே.

61. விளைந்த சினமெழு சிங்கத்தின் வாயை விசித்ததுவும்
தளைந்த சிறைக்கத வந்திறந் தும்மெலிக் காவினிலே
வளைந்த எரிற்றுர விண்ணிடம் தன்னை வணக்கியதும்
குழைந்தஅன் பின்பெருக் கூறுங் கிறிஸ்தெனும் மந்
திரமே.

62. மேகமும் வானமும் வார்கட லோடு மிடைபுனலின்
பாகமும் அண்டமும் யாவும் படைத்த பராபரற்கு
தேகமும் வாட விழிகளுந் சோர சிலுவைதனில்
தாகமும் மிஞ்சிட, தண்ணீ ரிலையே தணிப்பதற்கே.

63. தணிக்க விலையோ? கடலோடு காற்றை தடையுறலால்
கணிக்கும் தொகையில தாமசுத் தாவியிற் காக்கலையோ?
பிணிக்கண் பலரையும் மீட்கலை யோ? அரும் பீடுகடைக்
கணிக்குமென் அன்ப! எனக்குமிலை நீதல் கடிதலவே.

64. கடியும் பவப்பரி காரியின் சித்தியைக் கண்டறிந்தேன்
தடியும் சிலைகளுங் கொண்டுதி ரம்வரச் சாடுகின்ற
குடியும் பவமும் உடையரை அன்பிற் குளிக்கவைத்து
படியும் படிபவப் பாரமும் நீக்கின பார்த்திடவே.

65. பார்க்குட் பசாசு மயக்க விழுவேன் பலதரம்நீ
ஈர்க்கும் பொழுதெழு வேனுடனே பவத் தேவிழுவேன்
சேர்க்கும் நரக மெனவறிந் தும்பவம் செய்திடுவேன்
ஆர்க்கும் அதிகொளும் அன்னானுன் பாதம் அடைக்
கலமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

66. அடைக்கலம் ஏற்பதும் பண்டைய பாவம் அதைத
[நீக்கித்தே
உடைக்க கொழுந்து மிருதயத் தோடற ஒண்விழிநீர்
துடைக்கருள் னிற்பதும் தூய்மையும் அன்பும்
[துகளிரியக்
கடைக்கணிக் காள்வதும் கண்டேன் குமாரக் கடவு
[ளிலே.

67. கடவும் மதமலை ஆதிய அஃறிணைக் கண்ணுளவும்
கடவு ளெனத்தொழு தேசென்ற போதுன் கடைக்
[கணருள்
படவு மடியவன் செய்ததொன் றில்லைப் பவங்களலால்
தடவும் மதிவான் றரைகடல் யாவையுந் தந்தவரே.

68. தந்தை யெனவுனை யோராத நாளில் தரியலனுய்
நிந்தை புரையால் நினைப்பழித் தேனைக் நினைவிறந்து
சிந்தை மகிழத் திருவரு ளீந்த சிறந்தநின்போல்
எந்த உலகிலும் எஞ்ஞான்று மில்லை எவருமன்றே.

69. அன்றே பவத்தி னுருவாகி நாளும் அழியுமெனைக்
கன்றே தணந்தழும் கற்றுவின் வந்து கசிந்தணைத்து
இன்றேன் துளிக்கின்ற சீவ தருவி னிருங்கனிகள்
தின்றேறத் சீவன் பெறவீந் தருளிய தெய்வமிதே.

70. தெய்வம் பலவென்பர் செய்யும் பவத்தினை நாமழித்தே
உய்வ மெனவு முரைப்பாரின் மார்க்கம் ஒருவிவிட்டே
தெய்வ மொருவர் அவர்கிறிஸ் தென்றனைத் தேடியமை
மெய்வந்த நின்கருணைப்பெருக் காலன்றி வேறிலையே.

71. வேறிலை ஐயா! நினைப்போ லெனக்கு விளைசகமே
கூறிலை என்போ லசுத்த மனத்துச் சுருசருக்கும்

பேறிலை என்றே பெரும்பவந் தீர்க்கும் பெரியவரே
கோறிலை தீயவ னென்றெனை வாட்டிக் குலவலயத்தே.

72. தேவ சுதனைத் தெவிட்டா தறிய செழுங்கனியை
சிவ தருவை சிறுமைப்பட் டோர்களின் தன்துணையை
பாவ மழிக்கும் பரமப் பொருளைப் பழித்திழித்த
நாவு முடையவன் நானுனை யேத்துதல் நன்றாகன்றே.

73. நன்றி மறந்தவன் நானெனவும் ஆணவம் காட்டுபவன்
துன்றி நிறையவும் மேலும் பவத்தின் சுமையினைப் [போன்
குன்றி யளவும் நலமிலன் சேற்றில் குளித்துவக்கும்
பன்றி யனையென் அடைந்தே னிரங்கிப் பரிந்தருளே!

74. அருளே! அருளே! யென்றுனைக் கேட்கி அலட்டுவேன்
மருளே தரும்பவத் தன்னி லுறைந்து மனமகிழ்வேன்
தெருளே யடைந்துபின் சிக்கிஎன் றென்னைச் [சினந்துகொள்வேன்
இருளே தவிர்வழி கண்டிலன் அப்பா! இரங்குகவே.

75. இரங்குக தீய கொடியன் இழிஞன் எனினுமெந்தாய்
இரங்குக அன்பின் குருதி குருசில் இறைத்தவரே
இரங்குக அப்பா! கிறிஸ்தெனு மெங்கள் இறையவனே
இரங்குக நின்கிரு பைப்படி யேழைக் கிரங்குகவே.

76. இரங்குக நீச னுளமுந் திருப்பி இனிப்பவரே
இரங்குக நின்னைச் சிலுவையில் ஏற்றி இடித்தழித்தேன்
இரங்குக அன்பால் இரங்குக பாவிக் கிரங்குகவே
இரங்குக எந்த னுளங்கள வாடு மிருங்கள்வனே.

77. கள்ளனென் றுழுங்கல் வெள்ளனென் றுழுங் கடை [யவன்நான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னை புணக்கல மோசிகிரி யேன்செய் பெரும்பவங்கள்
தன்னிப் பொறுத்தெனைத் தண்டிக்கும் ஐயா! தயவு
[வைப்பாய்
உள்ளத்திலே ஆழமும் காணும்மெய்ஞ் ஞான ஒளிச்
[சுடரே.

78. சுடரே! சுடர் தெளிவே! ஒளியிற் றொடர்தெளிவே!
இடரே புரினும் இனியன நீக்கினும் என்னிதயம்
படரேசு காக பராபர ஞானமெனப் பன்னிநின்று
தொடரே தமிழ்த் திருமொழிச் வாசம் சுரக்கருளே!

79. சுரக்க கருணை விதியும் முறுவலும் தாயொளி
பரந்த மகிழ்ச்சியின் வதனமும் தேன்போற் பகர்மொழியும்
காந்தலே கால்வழி சேரும் குருகியும் கண்டவரே
புரந்தநீத் யானந்த வாழ்விற் களிக்கப் புகுவரே.

80. புருக்கள் பெறுங்கடல் மெய்க்கருள் மேகம் புடை
[பெயர்ந்து
கருக்காட் சண்ட கிரியிற் கருணை மழைபொழிய
சுகந்தமைத் தேபுயிர்ச் சாலிகள் ஓங்கத் தரைசெழித்து
மிருக்க பெருக்குறு சிவ நதியென மேவினதே.

81. மேவுமிச் சிவ நதியுல கெங்கும் மிகப்பரந்தே
காவும் கடலும் கரையும் நிலனும் கனவரையும்
பாவு முலகத்தி னப்புறம் இப்புறம் பாய்ந்துசென்றே
சாவு மழித்துள மாயக் கடலிற் கலைப்பெயுமே.

82. கலையே வணங்கிட கண்ணீர் கலுழ கடமுழுந்தாள்
நிலையே மடக்கப் புலன்களை யொன்றி நிலையில்நிற்க
உலையே கொதிப்ப தெனவெட் டுயிர்ப்பும் உறமனமே
அலையா துன் ஐயனை டொன்றுக கைகளும் அஞ்ச
[லித்தே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

83. சலித்தீத மதவனு சாரஞ் சுமந்து தவித்திளைத்து
பலித்தேவர் பல்லோர்ப் பாவியும் தாகம் பசிபகலெற்
கொலித்துயர் கற்பக சிவ கனிரசமூட் டியன்பால்
வலித்தினை யுந்தடுத் தாட்கொளும் வள்ளால் வருக!
[இன்றே.

84. வருக! குருசி லமர்ந்த முழுமுதல்! வஞ்சமனம்
உருக விலேவிழி நீருக வில்லை உடனடுக்கேன்
பெருகுமென் னுத்தம போசன மென்று பெரிதுளைக்
[கேசன்
தருகநின் மேல்முழுத் தாகமும் என்மேற் தயவுவைத்தே

85. வைத்த நெருப்பிற் குறுகிக் குளிரால் வருந்துகின்ற
உத்தம சிஷன் உனைமறந் தோடவும் அன்புதந்தாய்!
அத்த! உனைப்பழித் தேவிலங் காக அலைந்தவெனைப்
புத்தி வருவித்து மாண்டுகொண் டாயினும் பூதித்தவே.

86. பூத பவுதிக மாய புவனப் பொருள்அருளும்
நாத வுணர்விசை பாடுக! பாடுக!! நாவொடுவாய்
பாத மிரண்டுமுன் பாக்கியங் கொண்டு படர்கவுந்தன்
சாதனை மார்க்கத்தை சாதிக்க! கைகள் தவபுறவே.

87. தவமிருந் தேசரு காதி யருந்தித் தமைவருத்தி
பவவிருள் போக்கும் பரம குருவினைப் பார்க்கவென்றே
கவலை யுழன்றகம் மிக்கிய ஞானிகள் கண்டுவிட்டால்
பவவிருள் போக்கும் பரம குருவினைப் பாடுவரே.

88. பாடுங் கவிக்கருள் ஈயும் பரம்பொருள் பாதகங்கள்
ஓடும் படிசெயு முன்னைதன் உள்ள முடைந்தவர்கள்
வீடும் படிவிட வேசகி யாதவன் வித்தகனை
தேடும் படிநினை யாதவர்க் குள்ளத் தெருளிலையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

89. இலையே கிறிஸ்து சுவாமியை விட்டால் இரட்சணியம்
தலையே குருதி பெருகமுன் மௌனி தரித்தவர் தான்
புலையான மக்கட் குயிரோடு சுத்தமும் புத்துயிருந்
நிலையான வனும் ஈவார் அவரில் நிலைப்பவர்க்கே.

90. நிலைக்கும் திராட்சைச் செடியில் கிளைதான் நிலைப்பது
உலைக்கு முலக மயக்க மகல உனில் நிலைப்பேன் [போல்
கலைக்கட் கரியவர் அன்பர்க் கெளியவர் கண்டிரங்கி
விலைக்கடி யேனைப் பிசாசிடம் வாங்கிய விண்ணவனே!

91. விண்ணி னுலகை வியன்குரு சேரி மிகநனிந்தே
மண்ணி னுலகிற் கிழுத்தவர் வாழ்ந்திட மானிடர்கள்
எண்ணி னடங்கா வுலக மலைத்தவர் என்னையுந்தன்
கண்ணினின் மணியெனக் காப்பதும் ஓர்கனி வான அன்பே.

92. அன்பெனப் பேசி அறைந்தனர் பற்பல ராமுலகில்
என்பு கசிந்துட லுற்ற தொனியில் இரத்தமெழ
துன்பம் பலபல செய்யச் சிலுவையில் தோன்றியஅவ்
இன்ப வதன மிலங்குமன் பெங்கு மிலையிலையே!

93. யேசு வெனுந்திரு நாமமல் லாலில் விருநிலத்து
பேசு மொருதிரு நாமம் பிறிதில் பிதற்றலன்று
காசு பலவுள தெய்வந் தொழுமகக் கண்ணிலிகாள்
தூசுந் துரும்புமோர் தூணித் பெரிதோ துணிமினின்றே

94. துணிமின்! பலதெய்வ பூசனை நீக்கல் சுடர்கிறிஸ்தை
அணிமின்! அகத்தும் புறத்தும் அனுதினம் ஆசைசினம்
தணிமின்! மெய்ச் சத்தியத் திற்கெனப் பாடு தரித்
[தவர்க்கே
பணிமின்! அப் போது பரலோக நல்வளம் பாலிக்குமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. *பாலிக்குப் பாகுடன் தேன்பருப் பென்று பகருமிலை
சாலக் கலந்த அமுதினும் இன்பந் தருபவரின்
கோலக் கருணை வதனமும் அன்பின் கொழுவிழியும்
ஞாலங்கண் காணவெந் சாவை யினுமில துடிக்கிறதே.

96. துடிக்கத் துடிக்க உயிருச லாட உறுபிணியும்
வெடிக்க உதிரப் பெருக்கெடுத் தோடகல் மெய்
[துளங்க
அடிக்கும் சுரம்பொடு காசமும் சோரும் அமையத்திலும்
படிக்கா புருகிய அன்னைச் சிலுவையில் பார்த்தனனே.

97. பார்க்குள் மதங்கள் பலப்பல ஆகிப் பரந்ததுண்டு
தீர்க்கமும் உண்மையும் சீரும் அவற்றில் சிறந்ததுண்டு
ஆர்க்கு மிதயம் அனலாக தன்னை அரும்பலியாய்
வார்க்குந்தெய் வத்தையெம் மார்க்கத்தும் கண்டிலம்
[வாய்மையிதே.

98. வாய்மையும் அன்பும் பொறுமையும் தாழ்மையும்
[வண்மையுடன்
தூய்மையு மாய அணிகலம் பூட்டித் துகள்துடைத்து
தாய்மையின் அன்பாய் அணைத்தொரு பேரின்பந்
[தந்திடவே
சேய்மை புலகைத் துறந்தவர் பாதத்தைச் சேருவமே.

99. சேர்ந்தவர்க் கின்பந் தெவிட்டா தளித்திடும் தீங்கரும்பே!
சோர்ந்தவர்க் காவி யனல்மழை பெய்தா துகள்தவிர்ப்
[போய்!
ஓர்ந்துனை யண்டி உளமுடை வோர்கள் உலகிகந்து
சார்ந்துனை நித்திய சீவ னுறுபவர் சுத்தர்களே.

* பாலிக்கு—பால்+இக்கு ; இக்கு = கரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

100. சுத்த பவுல்மலை யப்பர்யோ னாறெறுநு கர்த்தரசிங்
காத்தனே கோடி பரிசுத்த ரின்கணம் எத்துமுமை
பித்த னசுத்தன்அந் நாதியிற் பாடிப் பிதற்றியமை
உத்தம மென்றாகப் பார்யோ? குருசில் உடைத்த அன்பே!

“கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்” சங். 96: 1.

“நான் உயிரோடிருக்குமட்டும் என் கர்த்தரைப்பாடுவேன்”
சங். 104: 33

திருச்சிலுவையந்தாதி
முற்றிற்று.

R. 21880.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COL
1872
LIBR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AR 15

JAFFNA COLLEGE
1872
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

JAFFNA COLLEGE LIBRARY
OCT 12 1943
VADDUKODDAI, CEYLON.

THE LANKABHIMANI PRESS.
PRINTERS, PUBLISHERS, BINDERS & STATIONERS
CHAVAKACHCHERI

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE©
A15467
ARCHIVES

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org